புதிய சமதர்மம்

පුදිය සමධර්ම

PUTHIYA SAMADHARMAM

இதழ்-22 | விலை ரூபா-10.00 | ஜூலை - 1999 | பக்கங்கள் 10

UNIVERSITY OF JAFFNA LIBRARY 12 AUG 1999 PERIODICALS DIVISION

உள்ளே:

தமிழீழ ஒறுப்புச் சட்டமும் பெண்களும்!

கிரிகெட் : நச்சுவிதை!

சிங்கள வீரவிதான!

படையப்பாவின் கோமாளித்தனம்!

புயலாக மாறியுள்ள சேரிவாழ் மக்கள்!

# தமிழ் மக்கள் சந்திரிகாவை நிராகரித்துள்ளனர்

நடைபெற்று முடிந்த அனைத்து மகாசபைத் தேர்தல்களிலும், தமிழ் மக்கள் சந்திரிகா முன்னணியினரை நிராகரித்தே உள்ளனர். இச்சன்மானம் சந்திரிகா அரசு தமிழ் மக்களுக்கு செய்த துரோகத்துக்கு வழங்கப்பட்ட பரிசாகவும் கொள்ளலாம். தென்மாகாண சபைத்தேர்தலின், இறுதி பிரசாரக் கூட்டத்தில் சந்திரிகா பின்வருமாறு கூறியிருந்தார்.

யுத்தத்தில் எழுபத்தைந்து வீதம் முடிவடைந்துள்ளது. இன்னமும் இருபத்தைந்து வீதமே எஞ்சியுள்ளது. இவ்வருடத்துக்குள் அதுவும் முடிவடைந்து விடும்.

இதன் மூலம் சந்திரிகா எதை வலியுறுத்துகின்றார் என்பதை நாம் விளங்கிக் கொள்ள முடியும். சந்திரிகா அம்மாவின் வாயில் இருந்து, தற்போதும், சமாதானம், வெண்புறா, என்ற சொற்கள் வெளிவருவதில்லை. மாறாக இராணுவ வெற்றிகள், இராணுவ வீரர்களின் நலன்கள் பற்றிய கதைகளே வருகின்றன. எனவே தமிழ் மக்கள் தமது புள்ளிகளை சரியான முறையிலேயே வழங்கியுள்ளனர்.

அதே நேரத்தில் 17வருட ஐ.தே.க ஆட்சியில் அனுபவித்த வரலாறு காணாத இழப்புகளையும் வேதனைகளையும் மறந்து மாற்றீடாக மீண்டும் தமிழ் மக்கள் ஐ.தே.க.வுக்கு ஆதரவளிப்பது முட்டாள் தனம் என்றே கூற வேண்டும். அறிவுக்கு வேலை கொடு என்பர் அறிவறிந்தவர்கள். அரசியல் வானில் இன்று சிங்கள பேரினவாத சக்திகளின் முனைப்புகள் தெளிவாகக் காணக்கூடியதாயிருந்த போதும், அதற்கு அடிபணிந்து செயற்படாமல் இருக்க முடியாத ஐ.தே.க.வையோ பொதுஜன முன்னணியையோ தமிழ் மக்கள் ஆதரிப்பதற்கு எள்ளளவு நியாயமுமில்லை.



ஒரு காலத்தில் நம்பிக்கை நட்சத்திரமாக திகழ்ந்த பழைய இடதுசாரிகள் திசைமாறி விட்டது உண்மையே. அதற்காக இடதுசாரி பாதை தவறானது என எண்ணுவது தவறு. உறுதியான இடதுசாரி கோட்பாடுகள் தான் உண்மையில் கடைப்பிடிக்கப்பட வேண்டியவையாகும். பொருளாதார ரீதியில் பரந்துபட்ட ஏழை எளிய சிங்கள, முஸ்லிம் மக்களும் சிங்கள முதலாளித்துவ அரசாங்கங்கள் வைக்கும் சுமைகளை தாங்க முடியாமல் திணறிக் கொண்டிருப்பதைத் தமிழ் மக்கள் கருத்திற் கொள்ள வேண்டும்.

உண்மையில் அப்படியான நிலையிலுள்ள சிங்கள மக்கள் ஐ.தே.க.வையும் பொதுஜன முன்னணியையும் நிராகரித்து வருவது தெளிவாகத் தெரிகிறதல்லவா? இந்த நிலையில் தமிழ் மக்கள் எதிர்காலத்தில் தமது ஆதரவை கூடுதலாக புதிய இடதுசாரி சக்திகளுக்கே வழங்க வேண்டும். அவ்வாறான நிலையில் ஐ.தே.க.வோ பொதுஜன முன்னணியோ அரசாங்கம் அமைக்க முடியாமல் தர்மசங்கடத்தில் சிக்கிக் கொள்ளும்.

எனவே, தமிழ் மக்கள் துருவித்துருவி ஆராய்ந்து தெளிந்து செயற்பட வேண்டிய காலம் இது. முன்னெப்போதுமில்லாதவாறு இன்று தமிழ் மக்களின் கல்வி பாழடிக்கப்படுகிறது. இது இனக்கொலை யுத்தத்தின் ஒரு அங்கம் மலையகத்தில் தமிழ் மாணவர்களுக்கு பாடசாலைகளே இல்லை! அவர்கள் மீது சிங்கள மொழி திணிக்கும் படலம் கச்சிதமாக நடத்தப்பட்டுவருகிறது. எனவே தான் சதாவிழிப்புத்தான் விடுதலைக்கு வேண்டியவிலை என்பதை எவரும் மறந்து விடக்கூடாது.

## கொழும்பு நகரில் அடிமைகளாக உள்ள தமிழ் தொழிலாளர்கள்.

இன்று வடக்கு கிழக்கில் நடைபெறும் யுத்தத்தின்கொடுமையால்பயத்தின்நிமித்தம் பாதுகாப்பு காரணம், தொழில் இல்லாதநிலை இவை போன்ற அனைத்து காரணங்களுக்காகவும் பல தொழிலாளர்கள் கொழும்புக்கு வந்துள்ளனா. இவர்கள் தாம் சார்ந்த தொழில்களுக்காக பல்வேறு இடங்களில் அலைந்து திரிகின்றனர். இவர்களின் பாதுகாப்பற்ற நிலைமையும் பொருளாதார சுமைகளையும்கவனத்தில்கொண்டுள்ள, சில கொழும்பு வர்த்தகர்கள் இவர்களை தமது அடிமைகளாக பாவித்து வருகின்றனர். இவர்களை பணியில் அமர்த்தியுள்ள இவ்வர்த்தக பெருமக்கள் இவர்களுக்கான, சேமலா/பநிதி. ஊழியர் நம்பிக்கை நிதியம் போன்றவற்றிற்க்கு பணம் செலுத்தாது இருக்கின்றனர். இங்கனம் இவர்களின் கீழ் பணிபுரியும் இத் தொழிலாளர்களுக்கு வாரத்தில் ஒரு நாள் கூட விடுமுறை வழங்கப்படாத துர்பாக்கிய நிலையும் உள்ளது.

இதே வேளை மலையகப் பகுதியில் இருந்து வேலைக்கு வரும் இளைஞர்களின் நிலை மிக பரிதாபமாக உள்ளது. இவ் இளைஞர்கள் அனேகரிடம் அடையாள அட்டை இல்லை. இதனால் இவர்களை பொலிசில் பதிவு செய்ய முடியாது. எனவே இவ் இளைஞர்கள் பொலிஸ், இராணுவ சோதனையின் போது கைது செய்யப்பட்டால் தடுப்புக் காவலில் வைக்கப்படுகின்றார்கள். நீதி மன்றம் இவர்களை 7 நாட்களோ, 14 நாட்களோ, தடுத்துவைக்குமாறு உத்தர விடுகிறது. பின்பு விடுதலை செய்யப்படும் இளைஞர்கள் மீண்டும் கைது செய்யப்பட்டாலும் இதே நிலைதான் இதனால் இவ் இளைஞர்களை தொழிலுக்கு வைத்திருக்கும் முதலாளிமாருக்கு இவ்விடயம் பெரிய அளவில் இலாபம் அளிப்பதாக உள்ளது. மேற்படி மலையக இளைஞர்கள் ஒரு முறை அல்லது இரண்டு முறை கைது செய்யப்பட்டவுடன் அவர்கள் கொழும்பில் நிற்பதற்கு அச்சப்படுவதால் மீண்டும் மலையகத்துக்கு பாய்ந்தோடி விடுவார்கள். இதனால் இவர்களை தொழிலில் வைத்திருக்கும் முதலாளி இவர்களுக்குரிய கொடுப்பனவுகளை உரிய முறையில் கொடுக்காது தப்பித்துக் கொள்கிறார்.

இதே நேரம் கொழும்பு நகரில் இத் தொழிலாளர்கள் கடமைபுரியும் இடங்களில் மலசல கூட வசதி ஓய்விட வசதி எதுவுமே இல்லாத நிலை காணப்படுகிறது. ஒரு தொழிலாளியிடம் எட்டு மணித்தியாலங்களுக்கு மேல் வேலை வாங்கக் கூடாது என எத்தனையோ ஆண்டுகளுக்கு முன் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. ஆனால் கொழும்பு நகர தொழிலாளர்க்கு இது விதிவிலக்காகவே உள்ளது. காலையில் இருந்து இரவு வரை கடமை புரிய வேண்டும் என்ற நிர்பந்தம் அத்தொழிலாளிக்கு உள்ளது.

தமிழ் தொழிலாளர் என்றால் புலியாக நினைக்கும், இலங்கை அரச நிர்வாகம் இந்த அநியாயங்களை பெரிது படுத்துவதில்லை. மேலும் இவ் அநீதிக்காக குமுறும் தொழிலாளியை மிக இலகுவான முறையில் பிரச்சினைக்குள் சிக்க வைக்க முதலாளிமாருக்கு பல வசதிகள் உண்டு.

எனவே நாட்டில் நடைபெறுகின்ற யுத்தத்தினால் ஒரு இனம் எத்தனையோ வழிகளில் துயரத்தை அனுபவிக்கிறது. அதே நேரத்தில் அம்மணமான சுரண்டலையும் அது அனுபவிக்கிறது. இதை செய்பவர்கள் வேறு யாருமல்ல தமிழ் முதலாளிகளே. எனவே நடைபெற்றுக் கொண்டு இருக்கும் யுத்தம் தமிழ் முதலாளிகளில் ஒரு பிரிவினருக்கு பெரும் லாபத்தை வழங்குவதாக அமையலாம்.

கொழும்பு நகரில் கடமை புரியும் தமிழ் தொழிலாளர்கள் அனேகர் தொழிற்சங்க உரிமைகள் அற்றே உள்ளனர். தொழிற்சங்கத்தில் சேர்ந்தால் அவர்களில் தொழில்கள் ஏதோ விதத்தில் பாதிக்கப்படும். இதனால் இத்தொழிலாளர்கள் தொழிற்சங்கத்தில் இணையக்கூட அச்சப்படுகின்றார்கள்.

தொழிலாளர்கள் போராடினால் தான் அவர்களின் உரிமைகளை பெறமுடியும். போராடாது விட்டால், அவர்களின் உரிமைகளை ஒரு போதும், வென்றெடுக்க முடியாது.

## வீரவிதானவின் மந்த புத்தியும் சிங்கள துவேச சிந்தையும் !

20.5.99ல் வீரவிதான எனும் அமைப்பானது கொழும்பு மாநகரில் ஒரு ஊர்வலமும் கூட்டமும் நடத்தி கொழும்பிலிருந்து தமிழர்கள் வெளியேற்றப்பட வேண்டும் என கோரிக்கை முன்வைத்ததாக செய்தி ஊடகங்கள் மூலம் அறிகிறோம். கொழும்பிலும் கண்டியிலும் இருந்து தமிழர்களும் முஸ்லீம்களும் வெளியேற்றப்பட வேண்டும் எனும் திட்டத்தின் முதலாவது கட்டமாகவே வீரவிதான மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளதாகவும் அறியப்படுகிறது. மேலும், தமிழர்கள் பொருளாதார ரீதியாகவும் பகிஷ்கரிக்கப்பட வேண்டுமெனவும், வீரவிதான திட்டம் தீட்டுகிறதாம். இலங்கை சிங்கள மக்களின் நாடு என வீரவிதான வின் பிரபல பேச்சாளராகிய சம்பிக்க ரணவக்க கூறியுள்ள அதேவேளை அவரின் சகபாடிகள், தமிழ் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண்பதற்கும் யுத்தத்தை நிறுத்துவதற்கும் தமிழ் இனவாதிகள் கிறிஸ்தவ அடிப்படை வாதிகள் ஊடாக மேற்கு மற்றும் ஸ்கண்டிநேவிய நாடுகளைத் தூண்டுவதற்கு முயல்கிறார்கள் என்றும் சாடியுள்ளனர்.

ஏற்கனவே வடகிழக்கையும் மலையகத்தையும் கைப்பற்றியுள்ள தமிழ் இனவாதிகள் முழு நாட்டையுமே கைப்பற்றி ஒரு திராவிடஸ்தான் ஆக மாற்றுவதற்கு முனைவதாகவும் வீரவிதான பேச்சாளர்கள் கூறியுள்ளனர். அரசாங்கத்தினால் யுத்தத்தை நடத்தவோ நாட்டின் பொருளாதாரத்தினை கட்டியெழுப்பவோ முடியாவிட்டால் தம்மிடம் ஆட்சிப்பொறுப்பைக் கையளிக்கலாம். எனவும் அவர்கள் கோரியுள்ளனர்.

முதலாவதாக வீரவிதான கோரிக்கைகளும் கூற்றுகளும். அது எவ்வளவு தூரம் அரசியல் மந்த புத்தியையும், துவேச சிந்தையையும் கொண்டு உலைகிறது என்பதையே காட்டுகிறது.

இரண்டாவதாக, வீரவிதான நாட்டை ஆள விரும்பினால் எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிட்டு நாட்டு மக்களின் ஆணையைப் பெற்றுக்கொள்வதற்கு அதற்கு முழு சுதந்திரம் உண்டு. மக்கள் உரிய பதில் கொடுப்பார்கள் அண்மைக் காலத்தில் பூமிப்புத்திர கட்சி போன்றவற்றிற்கு கிடைத்த அதிதீவிர சிங்கள தேசபக்த அமைப்புக்களுக்கு மக்கள் வழங்கிய அதே பதில்தான் வீரவிதானவுக்கும் கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை முன்னைய காலங்களில் கே.எம்.பி. இராஜரட்ன எம்.ஆர்.ஜயசூரிய, ஆர்.ஜீ. சேனநாயக்க போன்றோர் தலமையில் இயங்கி வந்த ஜாதிக்க விமுக்தி பெரமுன, சிங்கள மகஜன கட்சி போன்ற கதிதான் வீரவிதானவுக்கும் ஏற்படும் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை மக்கள் எனமேலும் அயோக்கிய அரசியல் வாதிகளால் ஏமாற்றப்படுவதற்குத் தயாராக இல்லை. இது இந்த நாட்டின் எதிர்காலத்திற்கு ஒரு நல்ல அறிகுறியாகும்.

## இனவாதிகளிடம் சரணடைந்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்!

அண்மையில் இ.தொ.க தலைமையகத்தின் மீது வீரவிதான இயக்கம் மேற்கொண்ட தாக்குதலுக்கு எதிராகவும், தமிழ், முஸ்லீம் மக்களுக்கு எதிராக வீரவிதான இயக்கம் வெளியிட்ட கருத்துக்களுக்கு எதிராகவும் தமிழ், முஸ்லீம் மக்கள் கொதித்து போய் உள்ளனர். இத்தகைய இனவாத நடவடிக்கைகளுக்கு எதிராக இலங்கை இந்திய வம்சாவளி பேரணியின் ஆர்பாட்ட ஊர்வலம் ஒன்றை ஜனாதிபதி இல்லம்வரை நடத்துவற்கு. கூட்டம் ஒன்றை ஒழுங்கு படுத்தியிருந்தனர். இக் கூட்டத்தில் கலந்து கொண்ட நவசமசமாஜக்கட்சி அரசியல் குழு உறுப்பினர் இரண்டு கோரிக்கைகளை சபையில் முன்வைத்தார்.

1. பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் தலமைகள் அவசரகாலச் சட்டத்துக்கு எதிராக வாக்களிக்க கோர வேண்டும்.
2. வீரவிதான இயக்கத்தின் நடவடிக்கைகளுக்கு பின்னால் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை உள்ளார். என கண்டிக்க வேண்டும்.

மேற்படி இரண்டு கோரிக்கைகளுக்கும் அவர்களிடம் இருந்து திருப்தியான பதில்கள் எமக்கு வழங்கப்பட வில்லை. மாறாக இக்காலப் தலைவர் தொண்டமான் மாத்தறையில் பொதுஜன முன்னணியை ஆதரித்து தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசியுள்ளார். அத்துடன் இ.தொ.க முக்கிய தலைவர்கள் வீரவிதான இயக்கத்தின் நடவடிக்கையை பெரிதுபடுத்த தேவையில்லை. அமைச்சர் ரத்வத்தை உரிய நடவடிக்கைகளை எடுப்பதாக வாக்குறுதி அளித்துள்ளார் என்றெல்லாம் தமிழ் மக்கள் காதில் பூ வைக்க முயன்றுள்ளனர். முதலில் ஆர்ப்பாட்ட ஊர்வலத்துடன் கடையடைப்பு என்றனர், பின்பு மறியல் போராட்டம் என்றனர், இறுதியில் கடையடைப்பு மட்டும் செய்யுங்கள் என்று கைவிரித்துள்ளனர்.

மேற்படி ஆர்ப்பாட்ட ஊர்வலம் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளில், இ.தொ.கா குழப்பமான திருகுதாளங்களிலேயே ஈடுபட்டிருந்தது. பொலிசாரிடம் அனுமதி கேட்பது போல் நடித்து போராட்டத்தின் சுருதினை எவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவு குறைக்கவே முழுப்பலத்தையும் பிரயோகித்தது. இறுதியில் 18.6.99ல் நடத்தப்பட இருந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை சாகடித்துள்ளது.

அன்புக்குரிய தமிழ் மக்களே! தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை கொச்சைப் படுத்தும் கருத்துக்களையே தொண்டமான் முன்வைத்து வருகிறார். வடக்கு கிழக்கு மக்கள் அரசுக்கு எதிராக போராடியதால்தான் இன்று கஸ்ட்டப் படுகிறார்கள் என்றும் தான் அரசுடன் ஒட்டியிருப்பதால் தான் மலையக மக்கள் சுபீட்சமாக உள்ளனர் என்றும் கூறி வருகிறார். இக்கருத்தை மலையக தாய்மார்களின் வயிற்றுக்குள் இருக்கும் குழந்தை கூட ஒப்புக் கொள்ளாது.

இறுதியாக நடைபெற்ற அவசரகாலச்சட்ட வாக்கெடுப்பில் இ.தொ.கா.வும் ஆதரவளித்துள்ளது.

இன்று தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கு எதிராக அரசு பாவிக்கும் துரும்பு சீட்டு தமிழ தலைவர்கள் அரசுக்கு வழங்கும் நிபந்தனையற்ற ஆதரவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.க.வும் பொதுஜன முன்னணியும் மீண்டும் தமிழ் வாக்கு வங்கிக்கு வலைவிரிப்பு !

## ரணில் திட்டம்

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு ரணில் திட்டங்கள் தீட்டுகின்றார் எனும் தலைப்பில் அண்மையில் ஒரு செய்தி வெளியாகியது. யுத்தத்தினை நிறுத்தி வடகிழக்கில் சமாதானத்தை மலரச் செய்வதற்காக ஒரு விரிவான திட்டத்தினை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார். ஐ.தே.கவின் மூத்த தலைவர் ஏ.சி.எஸ்.ஹமீட் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த சமரசிங்க மற்றும் ஐ.தே.க.வின் தேசிய ஒருமைப்பாட்டு குழுவின் தலைவர் டிரோன் பெர்ணாண்டோ ஆகியோர் கொண்டதொரு குழுவும் இதற்காக நியமிக்கப்பட்டுள்ளது. நீண்டகாலமாக நடைபெறும் யுத்தத்திற்கான அடிப்படைக் காரணிகளை இனம்காணல் அதிகாரப் பரவலாக்கம் செய்தல் ஆகிய விடயங்கள் தொடர்பாக மேற்படி குழு ஆராயுமாம். / அதுமட்டமல்லாமல் அடுத்த பாராளுமன்ற/ ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டம் பேச்சுவார்த்தை மூலமாக சமாதானத்தீர்வினை கொண்டுவருவதற்கு ரணில் உறுதிபூண்டுள்ளார் எனவும் வெளியாகிவுள்ள செய்திகள் கூறுகின்றன.

### தமிழ் மக்கள் ஏன் ஐ.தே.க. வை மன்னிக்க வேண்டும்.

சென்ற மாகாணசபைத் தேர்தல்கள் நடைபெறுவதற்கு சற்று முன்னதாக மன்னிக்க வேண்டுகின்றோம் மறக்கவும் வேண்டுகின்றோம் என ஐ.தே.க. ஒரு வேண்டுகோள் விடுத்திருந்தது. குறிப்பிடத்தக்களவு வாக்குகளையும் அறுவடை செய்தது. கணிசமானளவு தமிழ்மக்களும் ஐ.தே.க.வுக்கு வாக்களித்தனர். 17 வருட ஆட்சிக்காலத்தில் இழைத்த கொலைகள், தேர்தல் முறைகேடுகள், மோசடிகள், போன்ற பல்வேறு தவறுகளுக்காகவே ஐ.தே.க மக்களிடம் மன்னிப்பு கோரியதாக அறியப்பட்டது. இந்த நாட்டு மக்கள் குறிப்பாக தமிழ்மக்கள் இத்தகைய கபடமான அணுகுமுறையினை நிராகரிப்பதற்கு பதிலாக அதற்கு மீண்டும் மீண்டும் பலியாகிக் கொண்டிருப்பதானது மிக மிக கவலைக்குரியதாகும், மக்கள் மடையர்கள் என்று எண்ணி அவர்களின் வாக்குப்பலத்தை கொண்டு ஆட்சிக்கு வந்தபின் அதே மக்களையே பொருளாதார சீரழிவுக்கும் இனரீதியான அழித்தொழிப்பிற்கும் ஆளாக்கும் பெரிய கட்சிகளிடம் மாறி மாறி ஆட்சிப்பொறுப்பினை ஒப்படைப்பதோ எந்த வகையில் விவேகமானதாகும்? குறிப்பாக தமிழ் மக்கள் தமது இருப்பையே கேள்விக்குறியாக்கி வரும் ஆளும் கட்சிகள் பற்றி மிக மிக விழிப்பாக இருக்க வேண்டாமா? ஐ.தேக 1977ல் முன்வைத்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ் மக்களின் வாக்குவங்கியை கவருவதற்காக மிகுந்த கரிசனையுடன் மொழி, கல்வி, வேலைவாய்ப்பு, காணி, குடியேற்றம் ஆகிய விடயங்கள் தொடர்பாக தமிழ்மக்கள் கொண்டிருந்த உண்மையான மனக்குறைகள் (GENUINE GRIEVANCES) பற்றிக் குறிப்பிட்டிருந்தது. அவற்றுக்கெல்லாம் விரைந்து தீர்வுகாணப்போவதாக வாக்குறுதியளித்திருந்தது. ஆனால் ஐ.தே.க வின் 17 வருட ஆட்சிக்காலத்தில் தான் தமிழ் மக்கள் வரலாறு காணாத அழிப்புக்களுக்கும் அவல வாழ்க்கை நடத்தும் நிலைக்கும் தள்ளப்பட்டனர். அரசியல், பொருளாதார சமூக, கலாச்சார ரீதியாக பலத்த சிதைவுகளிற்கு ஆளாக்கப்பட்டனர். செடிகள், கொடிகள் எனச் சிறுமைப்படுத்தப்பட்டனர். இவற்றையெல்லாம் தமிழ் மக்கள் எவ்வாறு மறக்கவோ, மன்னிக்கவோ முடியும்?

பொதுஜன முன்னணி அரசாங்கம் தமிழ் மக்களை பூண்டோடு அழிக்க முனைகிறது. மறுபுறத்தில் 1994ல் குறிப்பாக ஜனாதிபதி தேர்தலின்போது பொதுஜன முன்னணி சார்பில் சந்திரிகா அம்மையார் தமிழ் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் அக்கறையாக இருப்பதாக காட்டிக் கொண்டார். பரந்தளவு அல்லது அதிகளவிலான அரசியல் அதிகார பரவலாக்கல் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என உறுதியளித்தனர். தேர்தலுக்கு முன்னர் கூட தமிழ் மக்களின் உரிமைகளை வழங்கி ஆயுதப்படைகள், வடக்கு கிழக்கிலிருந்து கௌரவமாக வாபஸ் பெறப்பட வேண்டுமென சந்திரிகா அம்மையார் வலியுறுத்தியிருந்தார். அவையெல்லாம் காற்றில் பறக்க விடப்பபட்டுள்ளன. பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் 41/2 வருட ஆட்சியின் கீழ் தமிழ் மக்களை அடிமைப்படுத்தி பூண்டோடு ஒழித்து விடும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்றால் அது மிகையல்ல. இராணுவ கெடுபிடிகள், பொருளாதார தடைகள், உணவு, மருந்து வகைகளுக்கான தடைதாமதங்கள், தட்டுப்பாடுகள் மூலம் மக்களை வாட்டி வதைக்கின்றனர்.

பொ.ஜ.முன்னணி, ஐ.தே.க மீண்டும் சுவையான தேர்தல் வாக்குறுதிகள் நாடகம்

இதனிடையில் ஜனாதிபதி சந்திரிகாவும் எதிர்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் கடந்த மேதினத்தில் ஆற்றிய உரைகளைப் பார்ப்போம். ஜனாதிபதி தனதுரையில் பின்வருமாறு கூறியுள்ளார். 21ம் நூற்றாண்டில் காலடி எடுத்து வைக்கும்முன்னர் தேசிய இனப்பிரச்சினைக்கு சகல மக்களும் ஏற்கக்கூடிய சட்டரீதியான அரசியல் தீர்வு காணப்படும். இதன் மூலம் அநியாயமான உயிர்பலிகளை தடுத்து நிறுத்துவதுடன் நாட்டை மீளக்கட்டியெழுப்ப முடியும்.

எதிர்க்கட்சி தலைவர் தனதுரையில் கூறியதாவது:-

இளைஞர்களைப் பலியெடுக்கும் யுத்தத்தை நிறுத்தி நாட்டைத் துண்டாடாமல் நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு மக்கள் மீண்டும் ஐ.தே.க வை ஆட்சியில் அமர்த்த வேண்டும்.

1977க்குப் பின் ஐ.தே.க. நாட்டின் கதவுகளை பல்தேசிய கம்பனிகளுக்கு அகலத்திறந்தது

இனப்பிரச்சினை அடங்கலாக பொருளாதார பிரச்சினைகளுக்கும் பரிகாரம் காணப்படும் ஒரு தர்மிஷ்ட் சமுதாயம் அமைக்கப்படும் என உறுதியளித்ததுத்தான் ஐ.தே.க 1977ல் 5/6 பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்தது. 17 வருட ஆட்சியில் இந்த நாட்டை பல்தேசிய கம்பனிகள் சூறையாடுவதற்கு வேண்டியளவுக்கு நாட்டின் கதவுகள் அகலத் திறந்து விடப்பட்டன. தமிழ் தேசிய இனப்பிரச்சினை முன்பிருந்ததை விட சிக்கலாக்கப்பட்டதுடன், யுத்தமே வெடிக்குமளவிற்கு தமிழ் மக்களின் இருப்புக்கு சவால் விடப்பட்டது. 1979ல் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தமிழ் இளைஞர்கள் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டு கொலைசெய்யப்பட்டு வீதிகளில் வீசப்பட்டனர். அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்த்தனாவின் உத்தரவின் கீழ் தான் அவையெல்லாம் நடாத்தப்பட்டன. இன்றைய ஐ.தே.க தலைவர் அன்று வேறு எங்குமல்ல, அதே அரசாங்கத்தில் அமைச்சராயிருந்தவர் பின்பு பிரதமராக பதவி வகித்தவர்.

### சந்திரிகாவின் அமோக வெற்றியும் ஈற்றில் தேக்க நிலையும்

மறுபுறத்தில் 1994ல் பாராளுமன்ற தேர்தலில் ஐ.தே.க. தூக்கியெறியப்பட்டதோடு அதன் சூட்டோடு நடத்தப்பட்ட ஜனாதிபதி தேர்தலில் சந்திரிகா அம்மையார் 62-6 % அறுதிப் பெரும்பான்மையுடன் அமோக வெற்றியீட்டினாரல்லவா? சமாதானப்புறாவாக காட்சியளித்தாரல்லவா? தமிழ் மக்களும் 80% ஆதரவை வழங்கியதுடன் அவரின் வெற்றியையும் கொண்டாடினார்கள் அல்லவா? அவையெல்லாம் அந்த நாள் ஞாபகம் மட்டுமே. இன்றென்னவென்றால் புலிகள் ஏமாற்றி விட்டார்கள் என்ற போர்வையில் தமிழ் மக்களை சிதறடித்து சீரழிக்கும் முழு அளவிலான யுத்தம் நடத்தப்படுகின்றது. அதற்குதான் பெயர் சமாதானத்திற்கான யுத்தம் என்கிறார் சந்திரிகா அம்மையார். அதே நேரத்தில் நாட்டு வளங்கள் விற்கப்படுகின்றன. அவற்றிலிருந்து ஈட்டும் பணமும் யுத்தத்திற்கு இறைக்கப்படுகின்றது. இவ்வருடம் 6.8 வீத பொருளாதார வளர்ச்சியை எதிர்பார்ப்பதாக அரசாங்கம் 1994ல் தனது கொள்கைப் பிரகடனத்தில் கூறியது. ஆனால் வளர்ச்சி வீதம் 4.7% என மத்திய வங்கி கூறுகின்றது. பண்டங்கள் சேவைகளின் விலை உயர்வுகளையும் பணவீக்க வீதத்தையும் பார்த்தால் 4.7% வளர்ச்சி தான் எங்கே? மத்திய வங்கி தப்புக்கணக்கு போடுகிறதா என மக்கள் அங்கலாய்க்கின்றனர். அத்தகையதொரு நிச்சயமற்ற தேக்கநிலையிலேயே இன்று நாடு உள்ளது.

### சிங்கள மக்கள் மத்தியில் எழுந்துவரும் வெறுப்பும் விரக்தியும்

இந்த நிலையில் இன்று பரந்துபட்ட சிங்கள மக்கள் மத்தியிலும் அதுவும் வேண்டாம். இதுவும் வேண்டாம், இரண்டும் ஒன்று தான் (ஏக்கத்எப்பா மேக்கத்எப்பா, தெக்கம எக்காய்) என ஐ.தே.கவுக்கும் பொதுஜன முன்னணிக்கும் எதிரான கண்டனங்கள் கிளம்பத் தொடங்கியுள்ளன. எனவே இக்கட்சிகள் இரண்டும் மக்களை தொடர்ந்து ஏமாற்றிக் கொண்டிருக்கலாமென தப்புக்கணக்குப் போட்டுக் கொண்டிருக்க முடியாது. மக்கள் கூடுதலான விழிப்புணர்வைப் பெற்று வருகிறார்கள். அந்த வகையிலேயே கடந்த மாகாணசபைத் தேர்தலில் 334,000 வாக்குகள்



பெரும்பாலும் வெறுப்பு, விரக்திகாரணமாக பழுதாக்கப்பட்டன. இந்த மக்கள் காலக்கிரமத்தில் புதிய இடதுசாரி சக்திகள் பக்கம் திரும்புவார்கள் என நம்பலாம். அதே நேரத்தில் புதிய இடதுசாரி சக்திகளின் செயற்பாடுகள் தமது நம்பகத்தன்மையை பிசகுபடுத்தாமல் பேணிக் காப்பாற்றிய வண்ணம் இருத்தல் வேண்டும்.

### பௌத்த பீடத்திலிருந்து ஞானோதயம் – திருப்புமுனையாக அமையுமா?

யுத்தம் தொடர்ந்து நடைபெறவேண்டும். யுத்தம் முடியும் வரை குறிப்பாக விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையே நடத்தக் கூடாது என நீண்ட காலமாக பௌத்த பீடாதிபதிகள் அடங்கலாக தீவிரவாத பௌத்த அமைப்புகள் வலியுறுத்தி வந்தது தெரிந்ததே. ஆனால் ஒரு சில நாட்களுக்கு முன்பு தான் அஸ்கிரிய பீடாதிபதி வண சந்தானந்த தேரா இனப்பிரச்சினைக்கு 3ம் தரப்பு மத்தியஸ்தத்துடனாயினும் தீர்வு காணப்பட வேண்டும், யுத்தம் - நிறுத்தப்பட வேண்டும். என்றெல்லாம் மேல்மாகாண முதலமைச்சர் சுசில் பிரேம் ஜயந்தவுக்கு எடுத்துக் கூறியுள்ளார். இதை ஒரு காலம் கடந்த ஞானம் என அழைப்பதைக் காட்டிலும் ஒரு பிரயாச்சித்தமான வெளிப்பாடு என எண்ணலாம். இது ஒரு திருப்பு முனையாக அமையுமா? சிங்கள பெரும்பான்மை அரசாங்கங்கள் ஆட்சியைக் கைப்பற்ற எல்லா இன மத மக்களினதும் ஆணையை பெற்றபின் பௌத்த பீடங்கள், மற்றும் சிங்கள பேரினவாத அமைப்புகளின் மேலாதிக்க விருப்பு வெறுப்புக்களுக்கு அமையவே ஆட்சி நடத்தி வந்துள்ளனர். 1957ல் பண்டாரநாயக்க செல்வநாயகம் ஒப்பந்தம் பண்டாரநாயக்காவால் ஒரு தலைபட்சமாக கிழித் தெறியப்பட்டது. அதற்கு நல்ல உதாரணமாகும். அந்த நிலை தொடர்ந்ததன் காரணமாகவே இந்த நாடு இன்று பிணக்காடாக மாறியுள்ளது. இரத்த ஆறு ஒன்று ஓயாது ஓடிக்கொண்டிருக்கிறது.

எனவேதான் காலம் கடந்த நிலையிலும் பௌத்த பீடத்திலிருந்து ஞானோதயம் பிறப்பது நல்ல சகுணம் தான்.

### தமிழ் தலைமைகள்

தமிழ் மக்கள் இன்று அரசியல் அநாதைகள். அவர்களுக்கு அரசியல் தலைமை இல்லை என்ற அந்தரிப்பு அதிகரித்துள்ளது. தமிழ் மக்களை எனிமேல் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் என அன்று தமிழரசுக்கட்சித்தலைவர் எஸ்.ஜே.வி செல்வநாயகம கூறிய போது கூட தமிழ் தலைமைகளின் கையாலாகாத்தனத்தையே பிரதிபலித்தார். அன்றைய தமிழ் தலைமைகளும் சிங்கள முதலாளித்துவ பேரினவாத தமிழ் தலைமைகளும் சிங்கள முதலாளித்துவ, பேரினவாத ஆட்சியாளருக்கு துணைபோனதும், இன்றும் அதே படலம் தொடருவதும் தான் தமிழ் மக்களை அழிவுப்பாதைக்கு இட்டுச்சென்றுள்ளது. இதிலிருந்து மீட்சிதான் இல்லையா? நிச்சயமாக உண்டு. அண்மையில் இலங்கை வந்த தென்னாபிரிக்க பாராளுமன்றக் குழுவினர், தமிழ் தலைமைகள் ஒன்று பட்டுச் செயற்பட்டால் வடகிழக்கிலிருந்து இராணுவத்தையே வெளியேற்றலாம் என்று கூறினர்களல்லவா? இன்று இராணுவத்தின் பிடியில் வடகிழக்கு மக்கள் திணறிக் கொண்டிருப்பது தமிழ் தலைமைகளுக்கு தெரியவில்லையா? காலம் கடத்துவது பேராபத்தானது என்பது புரிய வில்லையா? ஏன் தலைமைகள் என இன்னும் தம்மைக் கருதுபவர்கள் ஒரு பொது வேலைத்திட்டத்தினை முன்வைத்து ஒன்றுபட்டு போராட முடியாது? அரசியலில் சுயநலம், பயம், சுகபோகம் மற்றும் ஏகபோகத்திற்கு இடம் இருக்க முடியாது.

மலையகம் அடங்கலான எல்லா தமிழ் தலைமைகளும் ஆட்சியாளர்களால் கணக்கில் எடுக்கப்பட வேண்டுமானால் அவை அரசாங்கத்திற்கு வழங்கும் ஆதரவையும் வகிக்கும் பட்டம் பதவிகளையும் துறக்க வேண்டும். மக்களோடு மக்களாக வீதியிலிறங்கி போராட முன்வர வேண்டும். அத்தகைய போராட்டங்களுக்கு தென்னிலங்கையிலும் ஆதரவு உண்டு. பயங்கரவாதத்திற்கெதிரான தேசிய இயக்கம் மற்றும் வீரவிதான போன்ற சிறிய சிங்கள இனவெறிக்கும்பல்கள் தமிழ் முஸ்லிம் மக்களுக்கெதிராக பிதற்றித் திரிந்த போதும், அக்கும்பல்களை ஏற்கனவே நிராகரித்துவிட்ட பரந்துபட்ட சாதாரண சிங்கள மக்கள் அரசியல் தீர்வையும் சமாதானத்தையுமே விரும்புகிறார்கள் என்பது பலர் அறிந்த விடயம். குறிப்பாக யுத்தம் காரணமாக பொருளாதார ரீதியிலான சுமைகளைத் தாங்கிக் கொள்ள முடியாத ஏழை எளிய சிங்கள மக்கள் மத்தியிலும் ஆட்சியாளர்கள்மீதான ஆத்திரம் அதிகரித்து வருகிறது.

எனவே தான் தமிழ் தலைமைகள் தமக்கிடையில் எதிரும் புதிருமான அழிவுப்பாதையைக் கைவிட்டு ஆக்கபூர்வமான ஒன்றிணைந்த போராட்டங்களில் இறங்குங்கள் என்பது தான் தமிழ்மக்களின் இன்றைய ஏகோபித்த கண்டிப்பான எதிர்பார்ப்பாகும். இணைந்து போராட வேண்டிய வரலாற்றுத் தேவையை முஸ்லிம் தலைமைகளும் கவனத்தில் கொள்வது மிக அவசியமாகும்.

# ஜனதா விமுக்தி பெரமுனைக்கு இரண்டு முகங்களா?

ஜனதா விமுக்தி பெரமுனையினர், தமது கட்சியிடம் ஆட்சி அதிகாரத்தை தாருங்கள் என மக்களிடம் அறைகூவல் விடுத்து வருகின்றனர். பொதுஜன முன்னணியும், ஐக்கிய தேசியக் கட்சியும் கள்வர்கள் எனவே எம்மிடம் ஆட்சி பொறுப்பை ஒப்படையுங்கள், என பேசியும் எழுதியும் வருகின்றனர். ஜனதா விமுக்தி பெரமுனையினர், ஆட்சி அதிகாரத்தை பிடிக்க போராடுவது மகிழ்ச்சியான விடயமாகும். ஆனால் இன்று நீறு பூத்த நெருப்பாக இருக்கும் இனப்பிரச்சனை தொடர்பாக ஜனதா விமுக்தி பெரமுனை கொண்டிருக்கும் கருத்து தமிழ்மக்களை சிந்திக்க வைக்கிறது. தமிழரின் தாயக பூமி என்ற விடயத்திலும், அரசியல் தீர்விலும் ஜனதா விமுக்தி பெரமுனை ஒரு இனவாத போக்கையே காண்பிக்கிறது. இன்று தென் இலங்கையில் உள்ள முதலாளித்துவ கட்சியில் உள்ளவர்களே தமிழ் மக்களின் பிரச்சனை தீர்த்து வைக்கப்பட வேண்டும் என்ற முற்போக்கான கருத்தை கொண்டிருக்கையில் கால்மார்க்ஸ், லெனின் போன்றவர்களின் படங்களை கட்டிக் கொண்டு திரியும் ஜனதா விமுக்தி பெரமுனையினர், இனவாதிகள் போல் வேசமிடுவது கேலிக்குரியதாகும்.

ஜனதா விமுக்தி பெரமுனையினர் தேர்தல்கள் சம்பந்தமான கருத்து கூறுகின்ற போது தமது கட்சியின் வேட்பாளர்கள் சம்பந்தமான இலக்கங்களுக்கோ, வேட்பாளர்களுக்கோ, முக்கியத்துவம் கொடுப்பதில்லை. தாம் கட்சிக்கும் சின்னமான மணிக்கே முக்கயத்துவம் கொடுப்பதாக கூறுகின்றனர். இவர்களால் வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரமே படத்தில் காணப்படுகிறது. அந்த துண்டு பிரசுரத்தில் வேட்பாளரின் இலக்கம் அவர்களின் தகமைகள் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இலங்கையில் தாம் மாத்திரமே இடதுசாரி சக்தி என்றும் ஜனதாவிமுக்தி பெரமுனையினர் கூறுகின்றனர். இலங்கையில் உள்ள ஏனைய இடதுசாரி சக்திகள், இடதுசாரிகளே அல்ல என்றும் கூறுகின்றனர். இது எதிர் காலத்தில் இடதுசாரி ஐக்கியத்தை சீர்குலைக்கும் ஆபத்தான கருத்தாகும். இலங்கையில் சந்தர்ப்பவாத போக்குடைய இடதுசாரிகளும் உள்ளனர். உண்மையான புரட்சீகர செயற்பாட்டை உடைய இடதுசாரிகளும் உள்ளனர். இதன் அடிப்படையிலேயே இலங்கையில் உள்ள இடதுசாரி சக்திகளை இனங்காண வேண்டும். இன்று தமிழ் மக்களை பொறுத்தவரை ஜனதா விமுக்தி பெரமுனை, ஐக்கிய தேசியக்கட்சி, பொதுஜன முன்னணி போன்றவற்றை ஒரே கட்சிகளாகவே எடை போடுகின்றனர். அது சரியானதும் நிதானமாக எடுத்த முடிவு என்றே கூறவேண்டும். தமிழ் மக்கள் காதில் பூவைத்துக் கொண்டு திரியவில்லை. கையில் ஆயதம் ஏந்தி போராடி வருகின்றனர். தமிழ் மக்களின் போராட்டத்தை இன்று உலகமே அங்கீகரித்துள்ளது.

இத்தகைய நிலையில் தமிழ் மக்களின் தாயகத்தை ஒரு இடதுசாரி கட்சி என தன்னை பறை சாற்றும் ஜனதா விமுக்தி பெரமுனை தமிழ் மக்களின் பிரச்சனை சிறியபிரச்சினை என அடையாளம் இடுவது எதைக் காட்டுகிறது.

அண்மையில் ஒப் சேவர் பத்திரிகையில் டெல்வின் சில்வா சில கேள்விகளுக்கு அளித்த பதில் ஆச்சரியத்தை உண்டு பண்ணுகிறது. தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் தமிழ் மக்களுக்கு பிரச்சனை இருப்பதால் தான் போராடுகிறார்கள். ஆனால் அவர்கள் கேட்கும் தாயகத்தை எம்மால் வழங்க முடியாது என்றும் மாகாண சபைகள் இல்லாது போவதற்கு ஒரு மசோதா கொண்டு வரப்பட்டால் தாம் அதற்கு ஆதரவாக வாக்களிப்போம் எனவும் கூறியுள்ளார். தீர்வுப் பொதியை நிராகரிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலங்களில் ஜனதா விமுக்தி பெரமுனையினர் நவ சமசமாஜக் கட்சி போன்ற கட்சிகளுடன் இணைந்து செயற்பட்டனர். இதை அவதானித்த நாம் இவர்கள் மாற்றம் அடைந்து விடுகின்றார்கள் என எதிர்பார்த்தோம். ஆனால் மாகாண சபை தேர்தலின் பின்பு வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிய நிலையாக ஜனதாவிமுக்தி பெரமுனை உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவும் சர்வதேச போதைவஸ்து வர்த்தகத்தில் அதன் பாத்திரமும்!



இலத்தின் அமெரிக்காவைச் சேர்ந்த பேதைவஸ்து கடத்தல்காரர்களின் அச்சுறுத்தல் மறைந்து கொண்டிருக்கும் கெட்ட இராச்சியத்தை விட மோசமானதாக உள்ளது. 1989 செப்டம்பரில் அமெரிக்கா ஜனாதிபதி ஒரு அதிரடிப் பிரச்சாரத்தை ஆரம்பித்தார். அதே மாதத்தில் AP என்னும் செய்தி ஸ்தாபனத்தில் இலத்தின் அமெரிக்கா, ஆசியா, மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்கா நாட்டின் செய்திகளை விட போதைவஸ்து செய்திகளே அதிகம் வெளியாகின. தொலைக்காட்சி செய்திகள் சமுதாயத்திற்கு போதை வஸ்தினால் ஏற்படும் விளைவுகள் பற்றி விளம்பரப்படுத்தின.

இது மக்கள் மனதில் திடீரென ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. 1988ல் ஜனாதிபதி புஷ் தேர்தலில் வெற்றியீட்டிய போது பெறும்பான்மையான மக்கள் வரவு செலவு திட்டத்தில் துண்டு விழும் தொகை தான் நாட்டின் மிகப்பெரிய பிரச்சினை என்றார். அதே நேரம் 3% மக்கள் மட்டும் போதை வஸ்து பற்றிய தாக்கத்தினை குறிப்பிட்டனர். ஆனால் அதிரடிப் பிரசாதத்தின் விளைவாக வரவு செலவு பற்றிய விபரம் மங்கிப் போனதுடன் போதைவஸ்த்து தொடர்பாக அதிகம் அக்கறைக் காட்டியவர்களின் தொகை 40% முதல் 45% வரை அதிகரித்தது. இத்தகைய விடயம் ஒன்றில் இது வழக்கத்திற்கு மாறான அதி உயர்ந்த வீதமாகும்.

அமெரிக்கா அரசாங்கம் தமக்கு போதிய பணம் வழங்குவதில்லை என அமெரிக்காவின் கைப்பொம்மை அரசுகள் குறைப்படும் போது ருஷ்யாவை எதிர்ப்பதற்கான பணிகளின் முக்கியத்துவம் போதை வஸ்த்து கடத்தலை தடுப்பதை விட அதி முக்கியமானதாகும் என்று கூறுவதுண்டு. முன்னர் சோவியத் ஒன்றியத்தின் அச்சுறுத்தல் இருந்த இடத்தில் இன்று போதை வஸ்த்து இருப்பதால் அமெரிக்க அரசாங்கம் எதிர்ப்புகள், கிளர்ச்சிகள் இடம்பெறும் இடங்களில் தனது இராணுவ நடவடிக்கையை இந்த புதிய எதிரிக்கு எதிராக பாவிக்க சந்தர்ப்பம் ஏற்படுகின்றது.

சர்வதேசரீதியாக இந்த போதை வஸ்த்து யுத்தமானது தலையீட்டிற்கு வழிவகுக்கும் அதே நேரத்தில் உள் நாட்டு மக்களை திசை திருப்புவதற்கும் அடக்குமுறையை அதிகரிப்பதற்கும் குடிமக்களின் சுதந்திரங்களை நசுக்குவதற்கும் ஏதுவாக உள்ளது. போதை வஸ்து யுத்தம் தொடங்கிய போது வருடமொன்றுக்கு புகையிலை மேலாக இறப்புகளும் மது பாவனை மூலம் 10,000 இறப்புகளும் இடம் பெற்றதாக மதிப்பிடப்பட்டது ஆனால் ஜனாதிபதி புஷ் நிர்வாகம் இவற்றை நோக்கி நகர்வதை விடுத்து வருடமொன்றுக்கு 3500க்கு சற்று அதிகமான இறப்புகளை ஏற்படுத்திய சட்ட விரோதமான போதை வஸ்துகளையே கருத்தில் கொண்டது. இத்தகைய போதை வஸ்துகளின் பாவனை குறைந்திருந்த படியால் அவற்றின் பாவனையை குறைப்பதில் புஷ் நிர்வாகம் வெற்றியடையும் என காட்டுவது தான் இதற்கானதொரு காரணமாகும். புஷ் நிர்வாகத்தின் அதிரடி நடவடிக்கையானது போதைவஸ்து பிரச்சினையை மோசமாக்கியுள்ளது அதாவது, ஓரளவு தீமை அற்ற மரியுவான போதைவஸ்தினை பாவித்தவர்கள் (60 கோடி மக்கள் இதனை பாவித்தும் ஏதும் பெரிதாக இறப்புகள் ஏற்பட்டதாக இல்லை) ஆபத்து நிறைந்து கொசெயின் போன்ற போதைப் பொருட்களை பாவிப்பதற்கு தலைப்பட்டனர்.

1989 செப்டெம்பரில் பெரிய பரபரப்பாக போதைப்பொருள் யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட போது தாய்லாந்தில் அமெரிக்க புகையிலைக்கான இறக்குமதிக்கும் விளம்பரத்திற்கும் கட்டுப்பாடு விதித்தமைக்கு எதிராக அமெரிக்கா தடைகள் விதிக்க வேண்டும் என புகையிலை தொழில் துறையினர் விடுத்த வேண்டுகோளினை அமெரிக்கா வர்த்தக குழு வஷிங்டனில் பரிசீலித்துக் கொண்டிருந்தது. அமெரிக்கா அரசாங்கம் இத்தகைய நடவடிக்கைகள் இந்த ஆள்க்கொல்லி பண்டத்தினை (புகையிலை) ஜப்பான், தென்கொரியா, தாய்லாந் நாடுகளில் மக்கள் தொண்டைகளில் ஏற்கனவே திணித்து விட்டதே. அதற்கான மனித விலை ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி வர்த்தக குழு முன் சாட்சியமளித்த அமெரிக்கா உயர் வைத்திய எவரெட் கூப் பின்வருமாறு தெரிவித்தமையை கூர்ந்து கவனிக்கத்தக்கது. கொக்கெயின் பழக்கத்தை நிறுத்துவதற்கு நாம் வெளிநாட்டு அரசாங்கங்களோடு தொடர்பு கொண்டுள்ள அதே வேளை புகையிலையை அமெரிக்கா அரசாங்கம் ஏற்றுமதி செய்வதானது மிகுந்த வேடிக்கையானதாகும். இத்தகைய வர்த்தக கொள்கை எதிர்காலத்தில் மிக கேவளமானதாக கருதப்படும். வர்த்தக குழு முன் தாய்லாந்து பிரதிநிதியும் அமெரிக்கா நடவடிக்கையானது குறைந்து வந்துள்ள புகைப்பிடித்தல் பழக்கத்திற்கு புத்துயிர் அளிக்கும் என தெரிவித்தார். 150 வருடங்களுக்கு முன் நடைபெற்ற அபின் யுத்தம் (Opium War) இடம் பெற்ற போது சுதந்திர வர்த்தகம் எனும் போர்வையின் கீழ் பிரித்தானியா இந்தியாவிலிருந்து பிரித்தானிய அரசாங்கம் சீனாவின் கதவுகளை அகலத் திறந்து சீனா மக்களை போதைப் பொருள் பாவனைக்கு நிர்ப்பந்தமாக ஆட்படுத்தியதை விமர்சகர்கள் நினைவு கூர்ந்தனர்.

இன்று போதை பொருள் பற்றிய பெரிய கதை என்னவென்று பார்த்தால் அமெரிக்கா அரசாங்கமே உலகில் மிகப்பெரிய போதைப் பொருள் வியாபாரி என கொட்டை எழுத்துக்களில் பத்திரிக்கைகளில் தலையங்கங்கள் காணப்படுதல் ஆகும். இது பத்திரிக்கை விற்பனைக்கு உதவும். ஆனால் அதன் இறுதி முடிவுகள் பற்றி ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. மேலும் இரண்டாவது யுத்தத்தின் பின் அமெரிக்கா அரசாங்கம் போதைப்பொருள் கடத்தலில் முன்னணியில் நின்றுள்ளது என்பதும் சற்றேனும் கவனிக்கப்படுவதில்லை.


பிரான்சில் தொழிற் சங்க இயக்கம் சக்தி பெற்றுக் கொண்டு வந்த வேளையில் பிரெஞ்சு படைகள் வியட்நாமை மீண்டும் கைப்பற்றுவதற்கு ஆயுதங்கள் அனுப்புவதை தடுப்பதற்கு முற்பட்ட போது அமெரிக்கா உளவு ஸ்தாபனம் அதனை முறியடிக்கும் பணியை மேற்கொண்டது. அதற்கு பயன்படுத்திய மாபியா (Mafia) கும்பலுக்கு பாசிச அரசாங்கங்களால் தடைசெய்யப்பட்ட ஹெரொயின் போதை வஸ்த்து மோசடியை மீள் அமைப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. பின்பு போதைப்பொருள் வர்த்தகம் இந்தோ- சீனத்துக்கு குறிப்பாக் ஸாவோஸ் மற்றும் தாய்லாந்திற்கு மாற்றப்பட்டது. அதுவும் அமெரிக்கா உளவு ஸ்தாபனத்தின் நடவடிக்கையால் ஏற்பட்ட விளைவாகும். பின்பு அமெரிக்கா உளவு ஸ்தாபனம் தனது நடவடிக்கைகளை பாகிஸ்தானுக்கும் அப்கானிஸ்தானுக்கும் மாற்றிய போது போதைப்பொருள் மோசடி அங்கே செழித்தோங்கியது. நிக்காராகுவாவிற்கு எதிரான இரகசிய யுத்தமானது அந்த பிராந்தியத்தில் உள்ள போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு ஒரு ஊக்குவிப்பாக அமைந்தது. அதாவது அமெரிக்கா கூலிப்படையினருக்கு அமெரிக்கா உளவு ஸ்தாபனம் சட்டவிரோதமாக ஆயுதங்கள் அனுப்பும் விமானப் போக்குவரத்து மூலமே இந்த போதைப்பொருள் கடத்தல் நடத்தப்பட்டது.

போதைப்பொருள் கடத்தல் சர்வதேச பயங்கர வாதம் என்பதற்கு நெருங்கிய தொடர்பு உண்டு என்பது ஆச்சரியமான விடயமல்ல. இரகசிய ரீதியான செயற்பாடுகளுக்கு பெருந்தொகையான பணம் தேவையாகும். அந்தப்பணம் இலைமறைக் காயாகவே உலாவவும் வேண்டும். இதற்கு குற்றச்செயல்களில் கைதேர்ந்தவர்கள் தேவை. மிகுதியை நாம் சொல்லத் தேவையில்லை.

**நோம் சொம்ஸ்கி**



---



## சுரண்டும் வர்க்கமும் முதலாளித்துவ ஜனநாயகம்!

"... முதலாளித்துவச் சமுதாயத்தில், மிகவும் சாதகமான நிலைமைகளில் அது வளர்வதாய்க் கொள்வோமாயின், ஜனநாயகக் குடியரசில் ஓரளவு முழுமையான ஜனநாயகம் இருக்கக் காண்கிறோம். ஆனால் இந்த ஜனநாயகம் எப்பொழுதும் முதலாளித்துவச் சுரண்டலால் எழுப்பப்படும் குறுகலான வரம்புகளால் இறுக்கப்பட்டுள்ளது. ஆகவே இது நடைமுறையில் எப்பொழுதும் சிறுபான்மையோருக்கான ஜனநாயகமாகத்தான். சொத்துடைமை வர்க்கங்களுக்கு மட்டுமேயான, செல்வந்தர்களுக்கு மட்டுமேயான, ஜனநாயகமாகத்தான் இருக்கிறது. முதலாளித்துவச் சமுதாயத்தின் சுதந்திரமானது பண்டைக் கிரேக்க குடியரசுகளில் இருந்ததே, ஏறத்தாழ அதேபோல் அடிமையுடைமையாளர்களுக்கான சுதந்திரமாகத்தான் எப்பொழுதுமே இருந்து வருகிறது. முதலாளித்துவச் சுரண்டலின் நிலைமைகள் காரணமாய் தற்காலக் கூலி அடிமைகள் பட்டினியாலும் வறுமையாலும் நசுக்கப்பட்டு ஜனநாயகம் குறித்துத் தொல்லைப்பட முடியாதபடி அரசியல் குறித்துத் தொல்லைப்பட முடியாதபடி அவல நிலையில் இருத்தப்பட்டிருக்கிறார்கள். நிகழ்ச்சிகள் சாதாரணமாய் சமாதான வழியில் ஓடிக்கொண்டிருக்கையில் பெரும்பான்மையான மக்கள் பொதுவாழ்விலும் அரசியல் வாழ்விலும் ஈடுபட முடியாதவாறு தடுக்கப்பட்டுவிடுகிறார்கள்."


—லெனின்—

(நூல் - அரசும் புரட்சியும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கட்டுரை கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் சரிநிகர் பத்திரிகையில் வெளிவந்த கட்டுரையாகும். ஆரம்பத்தில் வழக்கில் இருந்த "கற்பழிப்பு" எனும் பதம் மோசமானது எனும் கருத்து விவாதத்துக்கு வந்த போது அதற்கு மாற்றாகஅறிமுகப்படுத்தப்பட்ட பாலியல் வல்லுறவு எனும் பதம் எழுத்து வழக்கில் பாவிக்கப்படுவதற்கு, முன்னோடியாக இந்த கட்டுரை அமைந்தது. இன்று இந்த பாலியல் வல்லுறவு எனும் பதமானது பாலியல் வன்புனர்ச்சி என ஏன் பாவிக்கப்படக்கூடாது எனும் கருத்தும் தற்போது விவாதத்துக்குள்ளாகி வருகிறது. எவ்வாறிருப்பினும் இக்கட்டுரை விடுதலைப் புலிகளின் தமிழீழ ஒறுப்புச் சட்டம் பற்றிய விமர்சனபூர்வமான கருத்துக்களை பெண்கள் நலனிலிருந்து முன்வைக்கிறது.

# தமிழீழ ஒறுப்புச் சட்டமும்! பெண்களின் உரிமைகளும்!



இன்று தென்னிலங்கையில் எவர் விரும்புகிற அல்லது விரும்பாத போதும் "தமிழீழம்"" என்கின்ற அரசாங்கம் ஒன்று இயங்கி வருவதை நாம் அறிகிறோம். அந்த அரசாங்கம் அரசாக (State) இன்னும் ஆகவில்லை என்பதும் உண்மை. எவ்வாறாயினும் வடக்கில் எழுதப்படாத அரசியலமைப் பொன்று நடைமுறையில் இருக்கத்தான் செய்கிறது. அந்த எடுகோளி லிருந்து வடக்கில் அமுலாக்கப்பட்டிரு க்கிற சட்டங்களை அலசிப் பார்ப்பது அவசியமானதொன்றே. அந்த வகை யில் "தமிழீழ ஒறுப்புச்சட்டம்"(Penel Code of Tamil Ealam) ('தண்டனை' இங்கு "ஒறுப்பு"' என அழைக்கப்படுகிறது.) முக்கியமான ஒன்று. அச்சட்டத்தில் பெண்களது உரிமை பேணப்பட்டிருக கிறதா? என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம். அதில் பெண்களுக்கான உரிமை பாதுகாக்கப் படக்கூடிய வகையில் சட்டம் ஆக்கப் பட்டிருக்கும் என்ற நம்பிக்கை கூட இருக்கிறதா? என்ற வினாவை ஒரு சிலர் எழுப்பக்கூடும். ஆனால் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனது பொன்மொழிகள் என சொல்லப்படுபவையோடு இது எத்தனை தூரம் பொருந்துகிறது என்கின்ற கேள்வியை எழுப்பிக் கொண்டு இது பற்றிய விமர்சனங்களை முன்வைக்கலாம் என்று தோன்றுகிறது. வே.பிரபாகரன் சொன்னதை இங்கு நோக்குவோம்.

"பெண்கள் சம உரிமை பெற்று சகல அடக்குமுறையில் இருந்தும் விடுதலை பெற்று ஆண்களுடன் கௌரவமாக வாழக்கூடிய புரட்சிகர சமுதாயமாகத் தமிழீழம் அமைய வேண்டும் என்பதே எனது ஆவல் -தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன்"" (ஆதாரம்:- நாற்று-2வது இதழ்-மாறன் பதிப்பகம், பக்கம்-6, தமிழீழ பெண்கள் ஆய்வு நிலையம்)

"ஆணாதிக்க ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டம் என்பது ஆண்களுக்கு எதிரான போராட்டம் அல்ல. இது ஆணாதிக்க அறியாமைக்கு எதிரான கருத்துப் போராட்டமாகும்." (அதே நூல்-பக்கம்-31)

"பெண் விடுதலை என்பது அரச ஒடுக்குமுறையில் இருந்தும் சமூக ஒடுக்குமுறையிலிருந்தும் பொருளா தாரச் சுரண்டல் முறையிலிருந்தும் விடுதலை பெறுவதேயாகும்."" (அதே நூல்- பக்கம்-35)

நடைமுறையில் உலகமெங்கும் சகல ஆட்சி நிர்வாக துறைகளிலும் ஆண்களது செல்வாகும் மேலாதிக்க முமே நிறைந்து காணப்படுவதை எவரும் அறிவர். சட்டமியற்றுதல், அதனை பிரயோகித்தல், என்பனவற்றைக் கூட ஆண்களே மேற்கொள்கின்றனர். எனவே ஆண்நிலைப்பட்ட ஆணாதிக்க தீர்மாணங்களும், முடிவுகளுமே பொதுவாக பெண்கள்மேல் திணிக்கப்படுகிறது. எனவே பெண்கள் தொடர்பான மரபு ரீதியான கருத்தியல் சிந்தனையிலிருந்து வெளிவரும் சட்டங்களினால் பெண்கள் பல்வேறு முறைகளில் பாதிப்புக்குள்ளாகி வருவது சர்வசாதாரண நிகழ்வாகியு ள்ளது. அந்த எடுகோளுடன் பார்த்தால் 'தமிழீழ ஒறுப்புச் சட்டம்"" கூட இவ்விடயத்தில் விதிவிலக்கல்ல. இனி ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

### தண்டனை

தண்டனைக்குரிய பதமாக தமிழீழ ஒறுப்புச் சட்டத்தில் 'ஒறுப்பு"" எனும் பதம் பிரயோகிக்கப்படுகிறது. இந்த தண்டனை விடயத்தில் எவருக்கெல் லாம் தண்டனை விதிக்கப்படல் வேண்டும் எனும் வறையறைக்குள் கீழ்வருமாறு கூறப்பட்டுள்ளது.

"குற்றவாளியாகக் காணப்படும் காலத்தில் கருவுற்றிருக்கும் பெண்ணு க்கு எதிராக மரண தண்டணை விதிக்க ப்படலோ, பதியப்படலோ ஆகாது. ஆனால் அதற்கு மாறாக கடுஞ்சிறை யொறுப்போ எளிய சிறையொறுப்போ வழங்கலாம்"" (பார்க்க-PCTE-சரத்து-47)

கருவுற்றிருக்கும் காலத்தில் பெண்ணுக்கு மரண தண்டனை விதிக்கக்கூ டாது என சொல்லப்பட்டது சரி. ஆனால் கருவுற்றிருக்கிற பெண்ணுக்கு கடுஞ்சி றையொறுப்பு வழங்கலாம் என்ற விடயம் பாரதூரமானது. 'கடுஞ்சிறையொறுப்பு" என்பதன் அர்த்தம் கடுமையான உடல் உழைப்போடு கூடிய தண்டனை என்பது குறிப்பிடத்தக்கது. (பார்க்க-PCTE-சரத்து-45(ஆ)(1))

ஏற்கனவே கருவளச் சுமை பெண்ணி டம் சுமத்தப்பட்டுள்ள நிலையில் 'கடும் உடலுழைப்பு" என்பது மிகவும் மோசகர மான தண்டனையாகவே கொள்ள முடியும்.

அது தவிர அந்த குறிப்பிட்ட பெண்ணுக்கு மாத்திரமல்லாது கருவுற்றிருக்கும் அப்பெண்ணின் கருவளத்தி ற்கும் ஏற்படுத்தும் உடல், உள ரீதியி லான தண்டனையாகவே இதனைக் கொள்ள முடியும்.

எனவே, செய்த குற்றத்திற்கான தண்டனையாக எளிய சிறையொறுப்பு போதுமானதெனலாம் அதிலும் கருவுற்றிருக்கிற நிலையில் சிறைக்குள் அவளது செயற்பாடுகளுக்கான சுதந்திரம் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

### கருக்கலைப்பு

கருக்கலைப்பு சுதந்திரமென்பது ஒவ்வொரு பெண்ணினதும் முக்கியமான ஒன்றாதல் வேண்டும்.

ஒறுப்புச் சட்டத்திலும் இது விடயத்தில் பிழையான அணுகு முறைகளையே காணக்கூடியதாக இருக்கிறது. உதாரணமாக:

உயிரைக் காப்பாற்றும் நோக்குடன் மட்டுமே கருக்கலைப்பு செய்யலாம் அல்லாது போனால் 3 ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய எவ்வகை சிறையொறுப்பும் வழங்கலாம். அப்பெண் உயிர்ப்புடன் துடிக்கும் கருவினை உடையவராக இருந்தால் ஏழு ஆண்டு சிறைத் தண்டனையுடன் குற்றக்காசிறுப்புக்கும் ஆளாதல் வேண்டும் என சொல்லப்பட் டுள்ளது. (PCTE-சரத்து-215)

சகல பெண்களும் விரும்பித்தான் கருவுறுகின்றனர் என்று கொள்ளவும் முடியாது. பாலியல் வல்லுறவுக்கூடா கவும், அவள் கருவைத் தாங்க நேரிடக்கூடும். (அது குடும்பத்தில் கனவனால் மேற்கொள்ளப்படும் பாலியல் வல்லுறவாகவும் இருக்கலாம்.) உற்ற கருவை கலைக்க முடியாமலும் போயிருக்கலாம். பாலியல் வல்லுறவு, அடிப்படையாக அமைந்தால் கருக்க லைப்பு செய்வதில் தவறில்லை என அதே சரத்தில் 'புறநடை விலக்கு" எனும் பகுதியில் கூறப்பட்டிருக்கிறது. என்ற போதும் 'புறநடை விலக்கு" (2) இல் கருக்கலைப்பு செய்வதானால் ஆணினதும் 'இசைவு" தேவை என கூறப்பட்டுள்ளது.

கருவை சுமக்கும் பெண்ணிடம்தான் கருவை சுமக்கும் சம்மதம் பற்றிக் கேட்டறிய வேண்டுமேயொழிய கனவ னது இசைவை அங்கு வலியுறுத்துவது பாரதூரமானது. பெண் விரும்பாத போதும் ஆணின் நிர்ப்பந்தத்தால் இப்படி நடப்பதுவுமுண்டு. அதாவது கருவை சுமப்பவள், தான் விரும்பாத போதும் ஆணின் கட்டாயத்துணையின் பேரில் அதனை சுமக்க வேண்டும் என இதன் மூலம் மறைமுகமாக நிர்ப்பந்திக் கப்படுகிறது. அது மட்டுமன்றி ஆணாதி க்க திணிப்புச் சூழலும் பெண்ணடிமை கருத்தியற் சமூக அமைப்பும் இன்று 'பாலியல் வல்லுறவு" என்பதை புறநிலையிலேயே கொள்கிறது. மனைவி விரும்பாத போதும் கனவனால் கட்டாய பாலியல் உறவுக்கு உள்ளாகும் வழமையான இயல்பு நிலையை பாலியல் வல்லுறவாக கொள்ளும் நிலை பல நாட்டு சட்டங்களில் இல்லை. எனவே இப்படியான சூழ்நிலையில் கருவை சுமத்தல் அல்லது கலைத்தல் தொடர்பான உரிமைகளை பெண்ணி டமே விட்டுவிட வேண்டும்.

கருக்கலைப்பு விடயத்தில் சில வேளை புலிகள் இயக்கத்தினர் தங்களது போர்க்கால மனித வள திரட்டலுக்கான (நீண்ட கால நோக்கைக் கொண்ட) - தந்திரோபாயமாக இதனைக் கொண்டிருக்கக் கூடும். என்ற போதும் போராட்டத்திற்கான பயன்படுத்தலுக்கு மாத்திரம் பெண்களைப் பயன்படுத்திக் கொண்டு அவர்களது உரிமைகளுக்கு எதிராக நடந்து கொள்கிறார்கள் என்ற அபிப்பிராயம் பரவுவதற்கும் இது வழிவகுக்கிறது.

### மறுமணம்

'மறுமணம்" விடயத்தில் அது இப்படிக் கூறுகிறது. "துணைவனோ, துணைவியோ உயிருடன் இருக்கும் போது அல்லது விவாகரத்து நடவாதிருக்கும் போது அவர்களில் எவரும் மறுமணம் செய்யக்கூடாதெ ன்றும் செய்தால் ஏழு ஆண்டுகள் வரை சிறைதண்டனை வழங்க வேண்டும். (PCTE-சரத்து 273) எனக் கூறப்பட்டி ருக்கிற போதும் அதன் 'புறநடை" பகுதியில் திருமணமான எவரும் துணைவியைப் பற்றியோ துணைவ னைப் பற்றியோ தகவல் எதுவுமில்லா மலிருப்பின் 5 வருடங்கள் காத்திருத்தல் வேண்டுமென நிர்ப்பந்திக்கிறது.

திருமணமான எவரும் துணைவி யைப் பற்றியோ துணைவனைப் பற்றி யோ தகவல் எதுவுமில்லாமலிருப்பின் 5 வருடங்கள் காத்திருத்தல் வேண்டு மென நிர்ப்பந்திக்கிறது.

திருமண கட்டமைப்பு என்பதே அது ஆண், பெண் ஆகிய இரு சாராரினதும் சகல சுதந்திரங்களையும் கட்டுப்ப டுத்தும் நிறுவனம் என்பது அறிந்ததே. பெரும்பாலும் திருமண கட்டமைப்பி னால் ஆணைவிட பெண், அதிக பாதிப்புக்குள்ளாகிறாள் என்பது இன்னொரு விடயம். இந்நிலையில் மேலே குறிப்பிட் டுள்ள 'காத்திருக்கும் வரையறை" என்பது அத்தியாவசியமானதென கருதமுடியாது.

### பாலியல் வல்லுறவு

பாலியல் வல்லுறவு குறித்து பல விடயங்களை நல்ல முறையில் அணுகியிருக்கிற போதும் ஆங்காங்கு சில பலவீனங்களைக் காண முடிகிறது.

'பாலியல் வல்லுறவு குற்றம்" புரிந்த ஒருவருக்கு மரண தண்டனையோ அல்லது 14 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையுடன் கூடிய குற்றக்கா சிறுப்போ விதிக்கப்படுமென கூறுகிறது. (PCTE-சரத்து-279-(அ)) குற்றம் புரிந்தவர் 24 வயதையடையாதவராக இருப்பின் தண்டனையைக் குறைக்கலாம் என்றும் கூறப்பட்டுள்ளது, என்ற போதும் 'பாலியல் வல்லுறவு" பற்றிய குற்ற வழக்கானது, அத்தவறு இழைக்கப்ப ட்டதிலிருந்து 3 மாதங்களுக்குப் பின் தொடரப்படலாகாது எனக் கூறப்பட்டு ள்ளது. (PCTE-சரத்து-283-(4)) சில நிர்ப்ப ந்தங்கள் காரணமாகவோ அல்லது வேறு காரணங்களாலோ முதல் மூன்று மாதங்களுக்குள் வழக்கு தொடர முடியாமல் போனவர்களுக்கு நீதித்துறை நீதி வழங்க முடியாது என கூறுவது சரியான ஒன்றல்ல.

இச்சட்டத்தில் 'பாலியல் வல்லுறவு", 'பாலியல் வன்முறை" இரண்டுக்கும் வெவ்வேறு அர்த்தங்கள் காட்டப்பட்டிருக்கிறது. அந்த வரையறை இதுவரை வேறு யாரும் செய்யாத ஒன்று என்ற ரீதியில் தமிழீழ ஒறுப்புச் சட்டத்திற்கு பெருமையுண்டு. உதாரணத்திற்கு,

"ஆண் குறியை சிறிதளவு பெண்குறியினுள் நுழைத்தாலும் 'பாலியல் வல்லு றவு"' நடைபெற்றதாகக் கொள்ளப் படும்" என்றிருக்கிறது.

"பெண்ணின் விருப்பத்திற்கு மாறாக அவளது பாலியல் உறுப்புக்களில் பாலியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வுடன் அல்லது அவரை இழிவுபடுத்தும் நோக்குடன் தீண்டுவது 'பாலியல் வன்முறை"த் தவறாகும்" என்றும் கூறப்பட்டுள்ளது.

என்றாலும் இது தொடர்பாக ஒறுப்புச் சட்டத்திலுள்ள பலவீனமென்ன வென்றால் மேற்படி வரையறையிலி ருந்து' பாலியல் வல்லுறவு" மற்றும் பாலியல் வன்முறை" ஆகியன ஆணொருவன் ஆண் மீது அல்லது பெண் பெண் மீது பிரயோகிக்கப்படும் 'பாலியல் வல்லுறவு"களையும் பாலியல் வன்முறைகளையும் கண்டும் காணாது விடுவதா என்ற கேள்வி எழுகின்றது. மேலும் இன்று குடும்பங்களில் கணவனால் மேற்கொள்ளப்படுகின்ற பலாத் கார பாலியல் உறவுகளையும் இங்கு கவனத்தில் எடுக்க வேண்டியது அவசியம். சமூக யதார்த்த நிலையில் பெண், ஆண்மீது பாலியல் பலாத்காரம் பண்ணுமளவு நிலைமை இல்லை என்பதை நாமறிவோம். சில வேளை இது மிக அபூர்வமாகவே இடம் பெறும். ஆனால் ஆண், ஆண் மீது இக்குற்றத்தை இழைப்பது இன்று சாதாரணமாகி வருவதை நடைமுறையில் அறிய முடிகிறது.

இதை விட 'பாலியல் வல்லுறவு" (Rape) மற்றும் 'பாலியல் வன்முறை" (Sexual Violence) என்பதைப் போலவே 'பாலியல் தொந்தரவுகள்" (Sexual Disturbance) என்ற ஒன்றை வேறுபடுத்தி பார்க்க வேண்டிய அவசியமும் உள்ளது. குறிப்பாக பாலியல் வக்கிர நோக்கில் தீண்டுவது, இழி சொற்களைப் பயன்படுத்துவது, மற்றும் தொடர்பு சாதனங்கள், கலை வடிவங்களுக்கூடாக பாலியல் ரீதியிலான இழிவுகளைப் பிரதிபலிக்கச் செய்தல். அசிங்கப்படுத்திக் காட்டுதல் என்பவற்றை வேறு படுத்தி இனங்காண வேண்டியதும் அவசியமானதாகும். இவ்வகையில் பாலியல் துஷ்பிரயோக நடவடிக்கைகளை வேறுபடுத்தி இனங்காண்பது நீண்ட நோக்கில் நன்மைகள் பயக்கும். குறிப்பாக இது தொடர்பான தண்டனையளித்தலின் போதும் வேறுபடுத்தி பரிசீலிப்பதற்கு இது மிகவும் துணைபுரியும். எதிர்காலத்தில் இப்பாகுபடுத்தல் மேலும் விரிவடையலாம்.

இச்சட்டத்திலேயே முதற் தடவை யாக 'பாலியல் வல்லுறவு" எனும் பதம் தமிழில் பாவிக்கப்பட்டுள்ளது. ஆரம்ப த்தில் தமிழில் 'கற்பழிப்பு" எனும் பதம் பயன்படுத்தப்பட்டபோது பெண்களுக்கு மட்டுமே கற்பின் தத்துவத்தை வலியுறு த்துவதாக அப்பதம் அமைந்திருந்த தாலும் பொருத்தமில்லாத சொல்லாக இருந்ததாலும் புதிய மாற்றுப் பதம் ஆக்கப்பட வேண்டியதன் அவசியம் தொடர்பாக பெண்ணிலைவாதிகளால் கருத்தாடப்பட்டதைத் தொடர்ந்து 'பாலியல் பலாத்காரம்" மற்றும் 'பாலியல் வன்முறை" ஆகிய பதங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இப்பதத்தை அறிமுகம் செய்ததில் 'சரிநிகர்" பத்திரிகைக்கு மிகுந்த பங்குண்டு. ஆனாலும் 'பாலியல் பலாத்காரம்" மற்றும் 'பாலியல் வன்முறை" ஆகிய பதங்களில் 'பாலியலுறவு" என்பது உள்ளடக்கப்படவில்லை என பல பெண்ணிலைவாதிகளால் பேசப்பட்டது. இந்நிலையில் தமிழீழ ஒறுப்புச்சட்டம் அறிமுகப்படுத்தியிருக்கிற 'பாலியல் வல்லுறவு" எனும் பதத்தில் பாலியல் (sexual) + வன்மை (violence) + உறவு (intercource) ஆகிய மூன்று விடயமும் உள்ளார்ந்திருப்பதால் இப்பதமே பொருத்தமானது' என்பதைப் பலர் ஏற்றுக்கொள்கின்றனர். சில வேளைக ளில் இதை விட நல்ல பதம் எதிர் காலத்தில் கண்டுபிடிக்கப்படலாம்.

### இயற்கைக்கு முரணான பாலியல் உறவு

எவரேனும் ஆணுடன் அல்லது பெண்ணுடன் அல்லது ஏதேனும் விலங்குடன் இயற்கை இயல்புகளுக்கு முரணாக உடலுறவு கொள்ளும் எவரும் 10 ஆண்டுகள் வரை இருவகையி லொருவகை சிறைத் தண்டனையுடன் குற்றக்காசிறுப்புக்ளும் உள்ளாதல் வேண்டும் என கூறுகிறது. (PCTE-சரத்து-(286))

இதில் 'இயற்கை இயல்புக்கு முரண்" என எதனை வறையறுத்திருக்கின்றனர் என்பதை குறிப்பிடாதது குழப்பத்தை ஏற்படுத்துகிறது.

இன்று பெண்களது விடுதலைக்கு தடையாக இருக்கும் முக்கிய ஒரு பிரச்சினையாக பாலியல் சுரண்டல் பாலியல் உறவுக் கட்டுப்பாடு என்பன காணப்படுகிறது. இந்நிலையில் மேற்குலக நாடுகளில் பெண்களின் பாலியல் தேவை பாலியல் சுரண்டலிலிருந்து விடுதலையடைதல் என்பன அங்கு புதிதாக விஞ்ஞான ரீதியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள செயற்கை பாலியல் புணர்வு முறைகள் அறிமுகமானதிலிருந்து சில வளர்ச்சிகளையும் ஏற்படுத்தியிருக் கிறது. மரபு ரீதியிலான கருத்தியல் கட்டுப்பாடு நிலவும் நாடுகளுக்கு இவை வழக்கத்துக்கு வர சில காலமெடுக்கக் கூடும். எனவே இயற்கைக்கு மாறாக உறவு கொள்தல் கூடாது என கூறுவது பெண்களது மட்டுமல்ல ஆண்களினதும் சுதந்திர இயல்புகளினதும் மீதான மோசகரமான கட்டுப்பாட்டு திணிப்பாகும்.

### பரத்தமை

'பரத்தமை" (விபச்சாரம்) பற்றி இன்னமும் நமது சமூகத்தில் நிலைபெற் றிருக்கிற கருத்தியல் காரணமாக பரத்தமையை குற்றத்திற்குரிய ஒன்றாகவே காண்கிறதே ஒழிய அதற்கான ஒட்டு மொத்தமான சமூக நிர்ப்பந்தத்தை இனங்காண்பதில் தவறிழைத்தே வருகிறது.

பரத்தமையில் ஒரு பெண் ஈடுபடுவதற்குக் காரணமாக பெண்ணின் பாலியல் மேலுணர்வை கொள்ள முடியாது. அதற்கான சமூகச் சூழலே பரத்தமை நிலையினை அடையக் காரணமாக இருக்கிறது. எனவே, அந்தச் சூழல் மாற்றியக்கப்படாதவரை இவற்றிற்கான தீர்வுமில்லை.

"காசு நோக்கத்திற்காக ஒரு பாலார் மறுபாலாருடன் உடலுறவு கொள்ளுதல் 'பரத்தமை" தவறாகும். இத்தவறுக்கு நான்கு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூ டிய இருவகையிலொருவகை சிறையொ றுப்பு வழங்கப்படுதல் வேண்டும்." (PCTE-சரத்து (481),(420))

பரத்தமை விடயத்தில் எப்போதும் பெண்ணே தண்டிக்கப்பட்டு வரும் இயல்பை நாம் காணலாம்.

"பணம் கொடுத்து பாலியல் புணர்ச்சிக்கு அழைப்பதற்கு ஆண்கள் தயாராக இருக்கும் போது பெண் மட்டும் ஏன் தண்டிக்கப்படுகிறாள்?" என வினவுகிறார் பெண்ணிலைவாதிகளில் ஒருவரான சுனிலா அபேசேகர.

இக்கேள்வியின் நியாயத்தன்மை சரியானதே. லஞ்சக் குற்றச்சாட்டின் போதெல்லாம் லஞ்சம் வாங்கியவரை மட்டுமல்லாது லஞ்சம் வழங்கிய வரையும் தண்டிக்கும் இந்த சட்டங்கள் பரத்தமை விடயத்தில் மாத்திரம் பரத்தமையை தூண்டும் ஆண்களைத் தப்ப விட்டுவிட்டு பெண்களை மட்டும் தண்டிப்பது மிக மோசமான நடைமுறை.

மேலும் 'விபச்சாரி" அல்லது 'வேசி" என்று இறுதியில்தூற்றப்படும் செய்கை கூட பெண்களுக்கு எதிராக மாத்திரமே பாவிக்கப்படுகிறது. இவ்வகையான பதப் பிரயோகம் கூட ஆண் மேலாதிக்க த்தை வெளிப்படுத்தும் பதப்பிரயோகமே. அப்பதங்களை பெண்கள் மீது மட்டுமே பிரயோகிக்க ஆணாதிக்கம் முயல்கிறது.

ஆண்கள் பல பெண்களுடன் பாலியலுறவில் ஈடுபட்டால் அவனை "விபச்சாரன்" அல்லது "பரத்தன்" போன்ற பதங்களைப் பாவிப்பதற்கான தமிழ்ச் சொல் வழக்காடல் இன்னமும் இல்லை. பெண்ணே தொடர்ந்தும் ஏசப்படலுக்குள்ளாகிறாள்.

இப்படி "தமிழீழ ஒறுப்புச் சட்டம்" தயாரிக்கப்படும் போது பெண்கள் தொடர்பான விடயங்களில் அசட்டையாகவே இருந்துள்ளனர் என ஒடுக்கப்படும் பெண்ணினம் குற்றம் சுமத்துவதை இலகுவாக மறுதலிக்க முடியாதே.

ஒறுப்புச் சட்டத்தில் இதுவரை காணாத பல புதிய நல்ல கருத்துக்க ளுடன் கூடிய சட்டமியற்றல் நடைபெற்றி ருக்கிற போதும் சிற்சில பலவீனங்களை உள்ளடக்கியிருப்பதை உணராது விட முடியாது. அதிலுள்ள "பெண்கள்" பற்றிய சிறு மதிப்பீடு மட்டுமே இதில் அடங்கியிருக்கிறது.

முழுமையாக அவை விமர்சனத்துக் கும் திருத்தங்களுக்கும் உள்ளாக வேண்டியதன் அவசியத்தை சம்பந்தப் பட்டவர்கள் உணர்வார்களாயின் ஆரோக்கியமான நகர்வுக்கு அவை சிறிதளவாவது வழிசமைக்கும்.

— கோமதி



## நேட்டோ தாக்குதலை நிறுத்துமா? சேர்பியா கொசோவாவை விட்டு வெளியேறுமா?

யூகோஸ்லாவிய ஜனாதிபதி மிலோசெவின் தன்னை ஒரு தீவிர சேர்பிய தேசியவாதியாக காட்ட முனைவதால் பொஸ்னிய பிரச்சனை தலைதூக்கியுள்ளது.

1993ல் அம்ஸ்ரெடாமிலா நடைபெற்ற சர்வதேச கூட்டத்தில் ஆற்றிய உரையில் கூறியது.

யூகோஸ்லாவிய ஜனாதிபதி செலொபொடன் மிலோசெவின் பதவியேற்ற காலம் முதல் அவர் தவறான வழியிலேயே யூகோஸ்லாவிய நாட்டை வழி நடத்த முணைந்துள்ளார். குறிப்பாக தன்னை ஒரு தீவிர சேர்பிய தேசிய வாதியாக அடையாளம் காட்டுவதை பெரிதும் விரும்பினார். இந்நிலை தற்போது பரிணாமம் அடைந்து அவரை சேர்பிய பேரினவாதியாக மாற்றியுள்ளது. யூகோஸ்லாவிய கம்யூனிஸ்ட் கட்சியில் சாதாரண அங்கத்தவராக முன்னர் விளங்கிய மிலோசெவிக் பின்னர் தேசியவாதத்தை பற்றிப்பிடித்துக் கொண்டதால் மிகப்பிரபல்யமடைந்தார். அதாவது கொசோவோவில் பெரும்பான்மையாகவுள்ள அல்பேனியர் அங்கே சிறுபான்மையாக உள்ள சேர்பியர்களை அடக்கி ஒடுக்குவதையிட்டு நான் கவலையடைகின்றேன்! என்ற ரீதியில் அவருடைய பிரச்சாரம் அமைந்துள்ளது. இத்தகைய இனவாத பிரச்சாரத்தின் மூலம் ஜனாதிபதி பதவியையும் அவர் அடைந்தார். ஆனால் அவர் ஜனாதிபதி பதவியேற்றபின்னரே கொசோவோ பிரச்சினை படிப்படியாக மிக உச்சநிலைக்குச் சென்றது. கொசோவோவில் சேர்பிய இன மக்களின் நலன்கள் காக்கப்படுகின்றது, என்ற போர்வையில் மிகப்பெரிய இனப்படுகொலையை மிலோசெவிக் நடத்தி வருகின்றார். அல்பேனிய மக்கள் பெரும்பான்மையினராக இருக்கும் கொசோவோ மாநிலத்திற்கு சுயாட்சி வழங்குவதற்கு அழுங்குப்பிடியாக மறுப்பதுடன் அல்பேனியர்களை அழித்தொழித்தும் எஞ்சியோரை விரட்டியும் விடுவதே ஈவிரக்கமற்ற சர்வாதிகாரி மிலோசெவிக்கின் திட்டமாகும். இலங்கையில் வடக்குக்கிழக்கு தமிழ் மக்கள் பெரும்பான்மை பிராந்தியமென்பதை சிங்கள பேரினவாத ஆட்சியாளர்களால் ஜீரணிக்க முடியாமல் அவர்களுக்குரிய சுயாட்சி உரிமையை ஏற்றுக்கொள்ள மறுப்பதாலும் ஒரு இனக்கொலை யுத்தமே நீண்டகாலமாக நடத்தப்பட்டு வருகிறதல்லவா? அதுபோலவே கொசோவோ அல்பேனிய மக்களை முற்றிலும் இனத்துவரீதியில் மிலேச்சத்தனமாக தாக்கி அவர்களை ஒட்டுமொத்தமாக விரட்டி சுத்திகரிப்புச் செய்வதுதான் மிலோசெவிக்கின் பிரயத்தனமாகும். அதனால்தான் அவர் பிரான்சில் தயாரிக்கப்பட்ட கொசோவோ சுயாட்சித்திட்டத்தை நிராகரித்தார்.

இதனிடையில் மிலோசெவிக்குக்கு ஒரு பாடம் புகட்ட வேண்டுமென திட்டமிட்ட அமெரிக்கா நேட்டோவை உசார் படுத்தி யுகோஸ்லாவியா மீது குண்டுமாரி பொழிய ஆரம்பித்தது. இதனை மிலோசெவிக் சாதகமாகப் பயன்படுத்தி கொசோவோ அல்பேனியர்களை இரவோடிரவாக விரட்டும் திட்டத்தை நடைமுறைப்படுத்தினார். 400,000 க்கு அதிகமான அல்பேனியர்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு அல்பேனியாவுக்கும், மசிடோனியாவுக்கும் இதர நாடுகளுக்கும் ஓடியுள்ளனர். நேட்டோ படைகளின் தாக்குதல் நடவடிக்கையானது சேர்பியதேசியவாதத்திற்கு மேலும் தூபமிட்டுள்ளது. இந்த வகையில் மிலோசெவிக் பெரிதும் நன்மையடைந்துள்ளார் என்று கூறலாம்.

வியட்நாம் யுத்தத்தில் நீண்டகாலமாக சிக்குண்டு இறுதியில் இழிவுடன் திரும்பிய அனுபவம் அமெரிக்காவுக்கு உண்டல்லவா? எனவேதான், தரைப்படைகளை இறக்காமல் அதிரடி வான்தாக்குதல்கள் மூலம் குறுகிய காலத்தில் மிலோசெவிக்கை அடிபணியச் செய்ய முடியுமென்பதே அமெரிக்காவின் திட்டமாகும். ஐ.நா. பாதுகாப்புச்சபையின் அனுமதிக்காகவும் அமெக்கா காத்திருக்கவில்லை. நானே ராஜா என்ற பாணியிலேயே காரியங்கள் நிறைவேற்றப்படுகின்றன. வான்தாக்குதல்கள் மூலம் ஏற்கனவே பலத்த அழிவுகளை ஏற்படுத்தியபோதும், அவை மூலம் நினைத்த காரியத்தை குறுகிய காலத்தில் சாதிக்க முடியாது என்பது புலனாகிவிட்டது. எனவே தான் தரைப்படைகளை விரைந்து ஈடுபடுத்துவதற்கு நேட்டோ தீர்மானித்துள்ளது. ஐ.நா. அமைதிகாக்கும் படைகள் சோமாலியாவில் சிக்கித்தவித்ததை நேட்டோ மறந்திருக்க முடியாது. கொசோவோ அல்பேனிய மக்களின் விடுதலை நோக்கி போராடுவதற்கு அமைக்கப்பட்ட கொசோவோ விடுதலைப்படையினை முறியடிக்க வேண்டுமென்பதே சேர்பிய பேரினவாதத்தின் நோக்கமாகும். நேட்டோவின் உயர்தொழில்நுட்பத்தாக்குதல் மத்தியில் அதனை சந்தர்ப்பமாக பயன்படுத்தியே மிலோசெவிக் அல்பேனியர்களை மனித கேடயமாகப் பாவித்து அவர்களை விரட்டவும் முற்பட்டார். தற்காலிகமாகவேனும் வெற்றியும் பெற்றார் என்று தான் கூறவேண்டும். ருஷ்யாவும் சீனாவும் நேட்டோ தாக்குதல்களை எதிர்த்துவந்த போதும் அதை தடுத்து நிறுத்தமுடியவில்லை. ஆனாலும் பெல்கிரேட்டில் சீனத்தூதரகம் தாக்குதலுக்கு இலக்காகியதால் சீனாவில் பலத்த ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. கிளின்ரன் பகிரங்க மன்னிப்புக் கோரியதுடன் ஆர்ப்பாட்டங்களும் அடங்கிவிட்டன.

இப்பிரச்சினை தொடர்பாக ஜேர்மனி முன்வைத்துள்ள திட்டத்தைப் பார்ப்போம். அதாவது, நேட்டோ தாக்குதல்கள் நிறுத்தப்படவேண்டும். சேர்பியப்படைகள் கொசோவோவில் இருந்து வாபஸ் பெறப்படவேண்டும். சர்வதேச அமைதிப்படையொன்றின் மேற்பார்வையின் கீழ் அகதிகள் மீளவேண்டும் என்பதாகும். இது முன்பிருந்த நிலைமைக்குத் திரும்புவதற்கான ஒரு இடைக்காலத் தீர்வாக அமையலாம். உத்தேச அமைதிப்படையானது எவ்வாறு தனது பணியை நிறைவேற்றும் என்பதில் கேள்விக்குறி இல்லாமலில்லை. ஆனால் அவை நிச்சயமாக நேட்டோ நாட்டுப் படைகளாகவோ அல்லது ருஷ்யப் படைகளாகவோ இருக்க முடியாது. மேலும் மிக முக்கியமான விடயம் கொசோவோ அல்பேனிய மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டியதாகும். தேசிய இனப்பிரச்சினைக்கு சுயநிர்ணய உரிமையுடன் கூடிய நியாயமான தீர்வு காணப்படாததாலேயே உலகின் பல பாகங்களில் சச்சரவுகள், கொந்தழிப்புக்கள் மற்றும் நீண்டகால உள்ளூர் யுத்தங்களே நடைபெறுகின்றன. இதில் இலங்கை முன்னணியில் திகழ்வதும் இதர தெற்காசிய நாடுகளும் இப்பிரச்சினையை சந்தித்துக்கொண்டிருப்பதையும் காண்கிறோம். தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வுவிடயம் அதிமுக்கியமானதாக உலகம் கவனத்தில்கொள்ளாவிட்டால் 400க்கும் மேற்பட்ட குட்டி நாடுகள் உருவாவதை தடுக்க முடியாமல் போகுமென முன்னாள் ஐ.நா.செயலாளர் நாயகம் பூற்றோஸ் காலி ஒரு தடவை தெரிவித்திருந்தார். இன்று ஐ.நா.வை முற்றாக ஒதுக்கிவிட்டுள்ள பாணியிலேயே அமெரிக்க ஏகாதிபத்தியமும் கிளின்ரன் நிர்வாகமும் செயற்படுகின்றனர். ஜனநாயகம், மனித உரிமைகள் பற்றியெல்லாம் ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களின் அடிவருடிகளும் போதனை செய்வது நகைப்புக்குரியதாகும்.

சுருங்கக்கூறின் கொசோவோ பிரச்சினையானது, பேரினவாதமும் ஏகாதிபத்திய அரக்கனும் உலகில் எவ்வளவு கொலைகள் கொடுரங்களை செய்வதற்கு தயங்கவில்லை என்பதை எடுத்துக்காட்டுகிறது. தேசிய ரீதியிலும் சர்வதேசரீதியிலும் அனைத்து அடக்கிஒடுக்கப்படும் மக்களும் தொழிலாளர்கள், விவசாயிகள், பெண்கள் ஆகிய யாபேரும் இணைந்து போராடியே [illegible] நோக்கிச் செல்லமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களவர் என்று அழைக்கப்பட்டவர்கள் மேட்டுக் குடியினர் மட்டுமே!

## கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன

**சமீபத்தில் கனடாவில் நடந்த மாநாட்டில் நவ சமசமாஜக் கட்சியின் பொதுச்செயலாளர் தோழர் விக்கரமபாகு கருணாரத்ன கருணாரத்ன ஆற்றிய உரை**

நவீன இலங்கையர் சமுதாயத்தில், தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமை முக்கியத்துவம் வாய்ந்த விடயமாக இருக்கின்றது. பல்வேறு வரலாற்று குறிப்புக்கள், தமிழ் சிங்கள தேர்தலின் காரணமாக வந்தது என்று, இப்பிரச்சினை மிகக் குறுகியதாக்கப்பட்டுள்ளது. பல்லின மக்கள் சார்ந்த சமுதாயத்தில் ஜனநாயகத்தை கட்டியெழுப்ப முடியாமல் போனதாலேயே இப் பிரச்சினை இன்று விஸ்ரூபம் எடுத்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபை இலங்கையை ஒரு தேசியமாக ஏற்றுக் கொண்டாலும், இலங்கை தேசிய இனம் என்பதை மக்கள் மத்தியில் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியிருக்கிறது. இலங்கையில் உள்ள மக்கள் தங்களை சிங்களவர், தமிழர், முஸ்லீம், பறங்கியர் வேடுவர் என்று கருதுகின்றனரே ஒழிய, மிக அருமையாகவே, சிறிலங்கன் என்று எண்ணுகின்றனர். இவ் அடிப்படையில் பார்க்கின்ற போது இலங்கை பலதேசிய இனங்கள் வாழும் நாடாக உள்ளது. ஒரு மார்க்சீய வாதி என்ற அளவில் முதலாளித்துவ சந்தைப் பொருளாதாரத்தின் கீழே தேசியங்கள் உண்மையிலேயே உருவாக்கப்பட்டுள்ளன. எனக்கருதுகிறேன். ஒரு பூரணத்துவம் வாய்ந்த தேசியமாக வளர்ச்சி பெறாமலிருந்தாலும். கூட தொடர்ச்சியாக ஒரு தேசியமாக உருபெறும் நோக்கில், போராடி வரும் ஒரு சமூகத்தையே குறிப்பிடுகிறேன்.

பொதுவாக தேசியம் என்ற சொல், ஒரு இறுக்கம் இல்லாமல் பொதுவான மொழியை பேசும் ஒரு குழுவையே குறிக்கிறது. ஆனால் நவீன சமுதாயத்தில், தேசியங்களின் பிரச்சினைகளை தெரிந்து கொள்வதற்கு இத்தகைய வரை விலக்கணங்கள் பயனற்றதாகும். கி.மு. 3ம் நூற்றாண்டில் இருந்தே சிங்கள, தமிழ், அடையாளம் இலங்கை வரலாற்றில் காணப்படுகிறது ஆனால், தமிழர் சிங்களவர் என்ற இக் குறிப்பீடுகள், காலத்துக்காலம் மாறுபட்டிருக்கின்றன. உதாரணமாக, சிங்களவர் என்பது அனுராதபுர காலத்திலே, நீர்பாசணத்தை அடிப்படையாகக் கொண்டு விவசாயத்தில் ஈடபட்டு வந்த சமுதாயம், தம்மை ஆரியர் வழித்தோன்றல் எனக் கருதினர். இந்துவெளி பிரதேசத்தில் கி.மு. 2000 நுாற்றாண்டில் வாழ்ந்த திராவிட இன சமூகத்தை வெற்றி கொண்ட மந்தை மேய்க்கும் சமுதாயமான ஆரிய பரம்பரை, கி.மு. 500 ஆண்டளவில் இலங்கை வந்து இங்கிருந்து திராவிட சமூகத்தை அடிமைப்படுத்தி கொண்டனர், என பொதுவாக நம்பப்படுகிறது. இவ்வாறு வம்சங்களுக்கு இடையில் இக்கால கட்டத்தில் தொடர்ந்து மோதல்கள் ஏற்பட்டன. இது இராசரட்டை, இராஜஇரட்டை நாகரீகத்தின் முடிவு வரையும் அதாவது, நிலப் பிரபுத்துவ சமுதாயத்தின் ஆரம்பம் வரை தொடர்ந்து இருந்தது. இங்கு சமூக அமைப்பு வர்த்தகத்தை அடிப்படையாகக் கொண்ட சாதிக் குழுக்களாக காணப்பட்டன.

பிரித்தானியர் கண்டியை கைப்பற்றும் வரை, ஆட்சியாளரையும், அவர்களை சார்ந்தவரையுமே சிங்களவர் என அழைக்கப்பட்டனர். மேட்டுக் குடியினரான ரதலபிரபுக்கள் தங்கவிள சிங்களவர் என்று அழைத்துக் கொண்டனர். இக்கால கட்டத்தில் மற்ற சாதிக்குழுக்களும், சிங்களம் பேசும் கீழ்நாட்டு மக்களும், சிங்களவர் என்ற தனித்துவத்தை பெற்று இருக்கவில்லை. இந்த கட்டத்திலே பாராம்பரியம், மரபு என்பதை விட சாதி என்பது முக்கியத்துவம் பெற்று இருந்தது. இந்த காலகட்டத்தில் ஜாதிய என்ற சிங்களச் சொல் இன்று சிங்கள தேசியத்தைக் குறிப்பிட்டாலும் அன்று சாதியைத் தான், இது குறிப்பிட்டது. தற்போது கூட கண்டி கிராமத்தைச் சேர்ந்த ஒருவரை உனது ஜாதி என்னவென்று கேட்டால், அவர் தனது சாதியையே என்னவென்று கூறுவார்.

எவ்வாறான போதிலும் இலங்கை மக்கள், தங்களுடைய சமூகத்தை விட சாதி குழுகளையே விசுவாசமாக கருதுவர். சிங்கள அரசவம்சத்தை சேர்ந்தவர்கள், சிங்கள இராச்சியத்தில் உள்ள குறைந்த சாதியினரை விட தமிழ் அரசவம்சத்தில் திருமணம் செய்வதை மேன்மையானது என்று கருதினர். இத்தகைய சிந்தனைகள் அரச குடும்பத்துக்கு மட்டுமல்ல எல்லா சாதிக் குழுக்களிலும் இந்த தன்மை காணப்பட்டது. இன்று கூட தமிழ் சிங்கள தேசிய இனங்களிடையே மோதல்கள் இருந்தாலும் கூட இந்த தன்மை இப்போதும் உள்ளது. இன்று நாங்கள் அறிந்த வரையில் கடந்த வரலாற்று காலத்தில் இப்போதுள்ள சிங்கள் தமிழ் வேற்றுமை காணப்படவில்லை என்பதை காட்டவே இதை குறிப்பிடுகின்றேன்.

தேசியத்தை கட்டியெழுப்புவது என்பது பொதுவாக ஒரு புதிய பரிணாமம் ஆகும். இது ஒரே மொழியையும், மரபுக்களையும் பின்பற்றும் ஒரு சமூகம் ஜனநாயக ரீதியில் இணைந்து செயற்படுவது இந்த முறையாகும். இது ஒரு தேசியம் தேசியத் தோற்றுவாயில், சாதி முறைகளை மற்றும் பிரபுத்துவ தடைகளையும் உடைத்தெறிந்து விட்டு சமத்துவம் சகோதரத்துவம் என்ற அடிப்படையிலே சமூகத்தை ஐக்கியப்படுத்துவதாகும்.

அண்மைக்காலத்தில் பல்வேறு தேசியங்கள் இலங்கையில் தோன்ற தொடங்கியிருப்தை அவதானிக்க கூடியதாக இருக்கிறது. அனாகரிக தர்மபாலாவின் ரெம்பரன்ஸ் இயக்கத்தின் மூலம் சிங்கள தேசியம் தோன்றத் தொடங்கியது. இதற்கு சமாந்தரமாக ஆறுமுக நாவலர், சித்திலெப்பை போன்றவர்கள் இயக்கங்களை ஆரம்பித்தனர். வேடுவர் சமூகம் கூட திசகாயின் தலைமையில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்த முன்வந்தது. இவ்வாறு 1948ம் ஆண்டு பிரித்தானியர் இலங்கையை விட்டு அகன்ற போது இலங்கை பல்வேறு தேசியத்தின் மிஞ்சியிருக்கும் சிறைக்கூடமாக காணப்பட்டது. அதிகாரம் அரங்கிலம் பேசும் அறிவாளிகள் கைகளில் குவிந்து கிடக்க அவர்கள் சமூகத்தில் தனியான ஒரு தேசியமாக நடந்து கொண்டனர். 10 லட்சத்துக்கும் குறைவான போலி ஆங்கிலோ செக்சன்ஸ்சை சேர்ந்தவர்கள் ஆங்கிலோ அமெரிக்க உயர் வகுப்பினரை போன்று தம்மைக் காட்டிக் கொள்பவர்களாக இவர்கள் காணப்பட்டதுடன் பொருளாதார, அரசியல் சமூக அதிகாரங்களை தமது கையில் வைத்திருந்தனர். சிங்கள பௌத்த இனவாதம் இவர்களின் செல்வாக்கை காப்பதற்காக இந்த அடிப்படையில் ஆட்சி அதிகாரம் கட்டியமைக்கப்பட்டது. டி.எஸ்.சேனநாயக்காவினால், கட்டியெழுப்பப்பட்ட இந்த நிலை பண்டாரநாயக்கா காலத்தில் தீவிரப்படுத்தப்பட்டது. அவர்கள் தமிழ் தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமையை பறித்து, தொழிலாளி [illegible] ஆக்கினர்.

தொடர்ச்சியாக தமிழ் மக்களுக்கு எதிரான பாகுபாடுகளை மேற்கொள்ள தொடர்ச்சியான ஆர்ப்பாட்டங்களை செய்தனர். ஆங்கிலம் அதிகாரத்தில் உள்ளவர்கள் மொழியாக இருக்க பாகுபாடுகளை மேற்கொள்வதற்கு ஆயுதமாக சிங்கள மொழி பாவிக்கப்பட்டது. தமிழ் பிரதேசங்களிலே சிங்கள குடியேற்ற திட்டங்களை அமைத்து, இனசகிப்பு தன்மை, இல்லாமல் செய்து, ஏழை சிங்கள மக்களை ஏமாற்றினர். தமிழ் மாணவர்களுக்கு எதிராக பாகுபாடுகளை மேற்கொள்வதற்காக மொழிரீதியான தரப்படுத்தலை, பயன்படுத்தினர். 1950களில், லங்கா சமசமாஜக்கட்சியின் தலைமையிலான மார்க்சீய இயக்கம் மோசடியை எதிர்த்து போராடியதுடன், சமத்துவம், ஜனநாயகம் சோசலிசத்துக்காக போராடினர்.



தமிழர்களும் தேசிய சிறுபான்மையினரும், இவர்களிடம் இருந்து நியாயம் கிடைக்கும் என எதிர்ப்பார்த்தனர். பின்னர் லங்கா சமசமாஜ கட்சியினதும் கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்கள், சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையில் இருந்த முதலாளித்துவ அரசுடன் இணையும் அடிப்படை முட்டாள் தனத்தை புரிந்தனர். அதிகாரத்துக்கு வந்தவுடன், சிங்கள இன வெறியர்களின் கைகளில், ஈடு வைக்கப்பட்டவர்களாக இவர்கள் காணப்பட்டனர். உண்மையில் ஒரு மொழி இரு தேசியங்கள் என்று கூறிய கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா, பௌத்த சமயத்துக்கு முதன்மை தரும் அரசியல் அமைப்பை வரைந்தவர்கள் ஆவார். இது இம் மொத்த காட்டிகொடுப்பு இதனால் தமிழ் இளைஞர்களை விழிப்புற வைத்தது. சிங்கள பௌத்த இன வெறியர்களுக்கு எதிராக பழைய இடதுசாரிகள் செயற்பட தவறியது, தமிழ் மக்களுக்கு எதிரான வன்செயல்கள் ஆரம்பமாக வழிவகுத்தது. இனக் கலவரங்கள் பல தடவைகள் வெடித்தன. மோசமான கட்டம் 1983ல் ஏற்பட்டது. இவை அனைத்தும், தமிழ் மக்கள் தமது விடுதலைப் போராட்டத்தை தொடங்க வழிவகுத்தது. இன்று இலங்கை தமிழ் தேசியம், ஒட்டுமொத்தமான தனித்துவத்தை கொண்டுள்ளது. முதலாவதாக இந்நாட்டு தமிழர்கள் என்ற வடக்கு, கிழக்கை சேர்ந்தவர்கள், ஈழந்தமிழர்களாக பர்ணமிக்க தொடங்கினர். இவர்களுடைய வளர்ச்சி தங்களது தாயகம் என்ற அடிப்படையில் வளர்ச்சியடைய தொடங்கியது. அவர்களின் தேசிய உணர்வுகள், ஒரு உயர்ந்த நிலைக்கு வளர்ச்சி அடைந்தன. இவ் அடிப்படையிலேயே அவர்களின் ஆயுதப் போராட்டம் இன்று நடந்து கொண்டு இருக்கிறது. தமிழ் தேசியத்தின் கேந்திர ஸ்தானங்களில் சந்திரிகாவின், சிங்கள இராணுவம், ஆக்கிரமித்துக் கொண்டிருந்தாலும், மேலாதிக்கம் செலுத்தும் நிலையில் இல்லை. பிரித்தானிய ஆட்சியாளர்களால், தென் இந்திய வம்சாவளியினரான மலையக மக்களான தமிழ் தோட்டத் தொழிலாளர்கள் இவ் ஈழவிடுதலைப் போராட்டத்தோடு மொத்தமாக தங்களை இமை காட்டிக் கொள்ளவில்லை. ஆனாலும் இவ்விளைஞர்கள் மத்தியில் இப்போராட்டங்கள் பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ஆனால் அவர்களது கோரிக்கைகள். சமூக. பொருளாதார காரணிகளால். இவர்களது கோரிக்கைகள் வேறுபட்டனவாகும். காணியும், குடியுரிமையும், தமிழ் பிரதேசங்களுக்கு சுயஆட்சி உள்ளூராட்சி நிர்வாகங்களில் அதிய பங்கு என்ற கோரிக்கைகளாகும். மூன்றாவதாக ஒரு கணிசமான தமிழ் சமுதாயம் கொழும்பிலும் அதன் சுற்று புறங்களிலும் வாழ்கின்றனர். அவர்கள் இந்திய தமிழர்களும், இந்நாட்டவர்களும் ஆவர். அண்மைக்கார அகதிகளை விட்டு மற்றவர்கள் சமத்துவம், நியாயம் என்பவற்றை பெறுவதில், போராட்டத்திற்கு ஆதரவு தருவதை விட கவனம் செலுத்துகின்றனர். எவ்வாறாயினும், தமிழ் மக்களில் உள்ள எல்லா பிரிவினரும், பயத்துக்கும், ஒடுக்குமுறைக்கும் ஆளாக்கப்பட்டு இருக்கிறார்கள், மறுபுறத்தில், யுத்தமானது, இவ் விடுதலை போராட்டத்தோடு இவர்களுக்கு உள்ள தொடர்பை பொருட்படுத்தாது தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

ஆரம்ப காலத்தில் இருந்தே நவசமசமாஜ கட்சி, தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காக போராடியிருக்கிறது. ஒரு அரசியல் கட்சியாக வளர்வதற்கு முன்னமே, தேசிய இனப்பிரச்சினையின் காரணமாக 1974ம் ஆண்டிலே லங்கா சமசமாஜக் கட்சியில் இருந்து வெளியேறினோம். தமிழ் தேசியம் தோன்ற ஆரம்பித்துள்ளது, அது தன்னுடைய சுயநிர்ணய உரிமைக்காக போராடுகிறார்கள் என்ற அரசியல் விளக்கத்தின் காரணத்துக்காகவே நாம் வெளியேறினோம். இரு தேசியங்களும் சுயேட்சையாக இணைவதில் மட்டும் தான் ஐக்கியம் உருவாக முடியும். இதற்கு சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ளல் என்பது முன் நிபந்தனையாக அமையும். ஜனநாயக ரீதியில் ஐக்கியப்படுவதற்கு சமத்துவம். சுயவாட்சி சுயநிர்ணய உரிமை என்பவற்றை ஏற்றுக் கொள்ள வேண்டும். எங்களுடைய அரசியல் ஆர்ப்பாட்டங்களில் இந்த ஒரு நிலைக்காக 1974ம் ஆண்டு முதல் போராடி வருகின்றோம். பல்வேறு கஸ்டங்களுக்கு மத்தியில் இந்தச் செய்திணை நாங்கள் சிங்கள மக்கள் மத்தியில் எடுத்துச் சென்றுள்ளோம். இதன் மூலம், இலங்கையிலுள்ள அரசியல் சக்திகளை சிந்திக்க வைத்திருக்கிறோம். சமத்துவம், சுயாட்சி, சுயநிர்ணய உரிமை என்ற இந்த கொள்கை அடிப்படை பரவலாக விவாதிக்கப்படுகிறது. பொதுமக்கள் மத்தியில், இதைப்பற்றிய தெளிவு நன்கு வளர்ச்சி அடைந்து வருகிறது. அரசாங்கத்தின் யுத்த நடவடிக்கைகளுக்கு எதிராக பரவலான எதிர்ப்பு ஏற்பட்டு இருக்கிறது. எதிர்காலத்திலே, இடதுசாரி அரசாங்கம் ஒன்றை உருவாக்க முடியும். அதனால், சமத்துவம், சுயாட்சி சுயநிர்ணய உரிமை என்ற பிரச்சினைகளை தீர்க்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரிக்கெட்:
# ஏகாதிபத்திய நச்சு விதைகள் இலங்கை கிரிக்கட்டில் ஆதிக்கம் செலுத்துகிறது

உலகக் கிண்ண கிரிக்கட் போட்டிகள் வெகு விமரிசையாக நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. 1995ல் உலகக் கிண்ணத்தை கைப்பற்றிய இலங்கை அணி இம்முறை முதல் சுற்றிலேயே ஆடுகளத்தில் இருந்து தோல்வியோடு நாடு திரும்பியுள்ளது. இலங்கை அணி இம்முறையும், வெற்றிக் கிண்ணத்துடன் வரும் என்ற நம்பிக்கையில், இருந்த சாதாரண மக்கள், இலங்கை அணியின் நிலை கண்டு ஆத்திரம் அடைந்த நிலையில் உள்ளனர். பத்திரிக்கைகளிலும் கடும் விமர்சனங்கள் எழுதப்பட்டுள்ளன.

உண்மையில் இலங்கை அணியின் தோல்விக்கான காரணத்தை ஆராயமுற்படுகின்ற போது இலங்கை கிரிக்கட் விளையாட்டின் வரலாற்றையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். இலங்கையில் கிரிக்கட் அறிமுகமாகும் போது, இங்கிலாந்தில் ஒக்ஸ்போட், கேம்பிறிட்ஜ் கல்லூரிகளில் படித்தவர்களின் ஆதிக்கம் நிறைந்ததாகவும், இலங்கையில் உள்ள றோயல் கல்லூரி, சென்-தோமஸ் கல்லூரி, கண்டி திரித்துவ கல்லூரி ஆகியவற்றில் படித்தவர்களுள் கிரிக்கட் விளையாட்டில் ஈடுபட்டும் வந்தனர். ஆங்கிலத்தை ஆங்கிலேயர் பேசுவது போல் உச்சரிக்கும் இலங்கை சமூகத்தின் செல்வாக்கில் கிரிக்கட் விளையாட்டு சிக்கிக் கிடந்தது. வெள்ளை எஜமான்களால், எமக்கு தரப்பட்ட இந்த விளையாட்டை அவர்களின் கலாச்சாரத்துடன் இணைந்தே விளையாட வேண்டும் என்ற ஏகாதிபத்திய அடிமை மனப்பான்மை உடைய ஒரு உயர் சமூகத்தில் இவ் விளையாட்டு சரண் அடைந்து இருந்தது. காலப்போக்கில் உயர் மட்டத்தினரின் கைக்குள் கிரிக்கட் விளையாட்டு இருப்பதற்கு எதிராக கீழ் மட்டத்தில் உள்ளவர்கள் எதிர்ப்புக் காட்டத் தொடங்கினர்.

பௌத்தம் இலங்கையில் மீள புனரமைக்கப்பட்ட போது கொழும்பில் ஆனந்தா கல்லூரி, நாளந்தா கல்லூரி என்பவற்றுடன் கண்டியில் தர்மராஜ கல்லூரியும் உருவாக்கப்பட்டது. இக் கல்வி நிறுவனங்களே, இலங்கையில் இரண்டாம் கட்ட விளையாட்டு வீரர்களை உருவாக்கியது. முன்னைய காலகட்டத்தில் மக்கள் கிரிக்கட் விளையாட்டை கண்டு கழிப்பதில் மூழ்கியிருந்ததை பிலிப்குணவர்த்தனா போன்றவர்கள் கண்டித்து இருந்தனர் பாணுக்கு மக்கள் கஸ்டப்படும் வேளையில் கிரிக்கட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது என்றே பிலிப் சாடினார்.

பின்னைய நாட்களில் இலங்கைக்கு கிரிக்கட் அந்தஸ்த்து வழங்கப்பட்ட கையோடு இலங்கையும், உலக கிண்ணத்தை தட்டிக் கொண்டது. இதனால் எமது கிரிக்கட் ரசிகர் மத்தியில், இலங்கை வீரர்கள் பற்றி அளவு கடந்த பெருமையும் ஆணவம் மிக்க நம்பிக்கையும் பற்றிக் கொண்டது.

எப்படி இருந்த போதும், உலகக் கிண்ண வெற்றியை தக்க வைத்துக் கொள்ளக் கூடிய ஆற்றலோ அனுபவ முதிர்ச்சியோ, இலங்கை அணியிடம் இல்லாமல் இருந்ததை பலர் அறியவில்லை. இதனிடையே கிரிக்கட்டில் அரசியலும் கூடுதலாக கலந்ததன் காரணமாக அதனை சரியான வழியில் நெறிப்படுத்தும் நடவடிக்கையும் உரிய முறையில் மேற்கொள்ளப்படவில்லை. கொழும்பையும் ஒரு சில முக்கிய நகரங்களையும் சார்ந்தவர்கள் கிரிக்கட்டில் ஆதிக்கம் செலுத்தி வந்தனர். பின் தங்கிய பகுதிகளை சார்ந்தவர்களோ, தமிழ், முஸ்லீம் இனங்களை சார்ந்தவர்களோ இலங்கை கிரிக்கட் விளையாட்டில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. இதுவும் இலங்கை கிரிக்கட் அணி ஆதாள பாதாளத்துக்கு செல்வதற்கு வழிவகுத்தது.

இந்த வகையில் இலங்கை படு மோசமாக, தோற்கடிக்கப்பட்டது அதிர்ச்சியாக சிலருக்கு பட்டாலும், இதில் அதிர்ச்சியடைவதற்கு ஒன்றுமே இல்லை என்றே கூற வேண்டும். இந்த கிரிக்கட் விளையாட்டை ஒட்டு மொத்தமாக பார்க்குமிடத்து ஏகாதிபத்திய கலாச்சாரம் சாதாரண மக்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவதை காணக் கூடியதாக உள்ளது. அரசியல், பொருளாதார நிலை எவ்வாறாக இருந்தாலும், கிரிக்கட் மக்களை பெரியளவில் பாதித்துள்ளது. உதாரணமாக வானொலி, தொலைக் காட்சியில் வரவு செலவு திட்டத்தையும், கிரிக்கட் விளையாட்டையும் ஏக காலத்தில் காட்டப்படும் போது மக்கள் கிரிக்கட் விளையாட்டுக்கே முக்கியத்துவம் கொடுத்து ரசிக்கின்றனர். கடந்த 21 ஆண்டுகாலமாக இலங்கை திறந்த பொருளாதார கொள்கையுடனேயே சீவிக்கின்றது. இதனால் பல்வேறுபட்ட அசிங்கங்கள் இலங்கைக்குள் வந்து குவிந்து கொண்டு இருக்கின்றது. மேற்கு நாட்டு விபச்சாரிகள் கூட இலங்கையில் நிறைய உழைக்கலாம் என்ற நம்பிக்கையோடு இலங்கையில் தளம் அமைத்துள்ளனர். எனவே கிரிக்கட் விளையாட்டில் கூட சூதாட்டகாரர்களின், அட்டகாசம், விளம்பர ஆதிக்கம், என்பவையால், மக்கள் பெரியளவில் பாதிக்கப்படுகின்றனர்.

## உனக்காக காத்திருக்கின்றது..!

இளைஞனே!
உன் இதயக் காதுகளை
கூர்மையாக்கிக் கொள்
கண் இமைக்கும் வேளையில்
விழும் ஷெல்லின் சிதறல்கள்
பூமிக்கு அடியில்
கருத்தரித்து இருக்கும்
தீக் குழம்பையே
அதிர வைக்கின்றன.
உன் செவிகளுக்கு இன்னும்
எட்டவில்லையா?

பருந்தைக் கண்ட
அணில் குஞ்சாய் - நீ
பாசக் கூண்டுக்குள்
புதைந்து கிடக்கின்றாய்
இதழ்களால் மூடப்பட்ட
மகரந்தம் போல் - நீ
உறவுகளால்
மறைக்கப்பட்டிருக்கின்றாய்
என்றோ ஒரு நாள்
அவைகளைப் போல் நீயும்
மரணிக்கத்தான் போகின்றாய்
பூக்களை இழப்பதற்கு மரம்
தயங்கினால்
சுவையின் கனிகளைக்
கண்டு கொள்ள முடியாது.
உன் உயிருக்காய்
சங்கினால் - தமிழர்
புதிய பரிணாமத்தைப்
பெற்றுக் கொள்ள முடியாது.
மேகம் நீரை
இழப்பதனால் தான்
பூமி மகள் சிரிக்கிறாள்
பேனா மையை இழப்பதனால்
தான்
எழுத்துக்கள்
பொறிக்கப்படுகின்றன.
தாவரங்கள் ஒட்சிசனை
இழப்பதனால் தான்
மானிடம் சுகமாய்
வாழ முடிகின்றது - நீ.
உன்னை இழக்கத்
தயாரான பின்பு தான்
அடுத்த சந்ததியினர்
சுவாசிக்கத் தயாராக முடியும்
பனித்துளிகளால்
பூரிப்படைந்த மலர் இதழ் போல்
உணர்ச்சியின் உஷ்ணத்தைப்
பெற்றுக் கொள்.

பலாலியூர் விஷ்ணுதாசன்

# காலி மாவட்டத்தில் கற்றன்தொல தேயிலை தோட்ட தமிழ் மக்களின் துயரநிலை !

தென்மாகாண சபை தேர்தலின் புதிய இடதுசாரி முன்னணிக்கு ஆதரவாக பிரசாரம் செய்வதற்காக எல்பிட்டிய பிரதேசத்தில் உள்ள கெற்றன்னொல தேயிலைத் தோட்டத்துக்கு சென்ற போது எமக்கு கிடைத்த தகவல்களை சுருக்கமாகத் தருகின்றோம்.

எல்பிட்டிய பிரதேசத்தில் உள்ள கெற்றன்னொல தேயிலைத் தோட்டத்தில் நூற்றுக்கணக்கான தமிழ் குடும்பங்கள் வாழ்கின்றன. இவர்கள் வாழ்கின்ற குடியிருப்புக்கள் யாவும் பிரித்தானியர் காலத்து குடியிருப்புக்களாகவே உள்ளன. மாற்றங்கள் எதையும் காணாத அதே தோட்ட லயன்களாகவே உள்ளன. அடிப்படை வசதிகள் எதுவும் இக் குடியிருப்புக்களுக்கு இல்லை. தமிழ் குடும்பங்கள் சிங்கள மொழியை பேசுகின்ற பிள்ளைகளுடன் எதிர்காலமே இருண்ட நிலையில் மனித ஜடங்களாக வாழ்கின்றனர்.

தமிழ் மக்களின் உரிமைக்காக போராடுகின்ற புதிய இடதுசாரி முன்னணிக்கு உங்கள் வாக்குகளை தாருங்கள் என்று, இப்பகுதியில் உள்ள ஒவ்வொரு குடும்பங்களையும் பார்த்து கேட்டோம். எமது வேண்டுகோளுக்கு பொதுவாக சகல மக்களிடம் இருந்தும் ஒரே பதிலே வெளிவந்தது. கடந்த 50 வருட காலமாக இப்படிதான் எல்லாரும் வந்து எங்களை ஏமாத்திட்டாங்க. இப்ப புதிசா நீங்கள் வந்துள்ளீர்கள். இப்பகுதிக்கு தொண்டமான், வந்துள்ளார், அதைச்செய்பிறேன் இதைச்செய்பிறேன் என்றார்கள், ஆனால் ஒன்றும் செய்யவில்லை. அன்று தொடக்கம் இன்று வரை பரம்பரை-பரம்பரையாக அடிமைகளாகவே இங்கு நாம் வாழ்கின்றோம். இம்மக்களின் விரக்தி அவர்களின் சோகம் என்பவற்றை ஆழமாக ஆராய வேண்டும்.

இந்த தமிழ் குடும்பங்களின் பிள்ளைகள் படிப்பதற்கு ஒரு தமிழ் பாடசாலை கூட இப்பகுதியில் இல்லை. இப்பிள்ளைகள் படிக்க விரும்பினால் சிங்கள பாடசாலைகளில் சிங்கள மொழி மூலம் படிக்கலாம். அப்படியே இப்பகுதி தமிழ் பிள்ளைகள் இன்று படிக்கின்றார்கள். இப்பகுதியில் விளையாடிக் கொண்டுநின்ற இளம் சிறார்களை அவதானித்த போது அவர்கள் சிங்கள மொழியை பேசியே விளையாடிக் கொண்டு நின்றார்கள். நாம் அவர்களை அணுகி நீங்கள் தமிழர் தமிழ் மொழியை பேசி விளையாடாமல் சிங்கள மொழியை பேசி ஏன் விளையாடுகின்றீர்கள் என்று கேட்ட போது, நாம் சிங்கள பாடசாலைகளில் படிப்பதால், எமக்கு சிங்கள மொழியே வருகின்றது என்றார்கள். நீங்கள் தமிழர்கள் சிங்கள பாடசாலைகளில் கல்வி கற்பதால் உங்களுக்கு பிரச்சினைகள் ஒன்றும் இல்லையா என்று கேட்டபோது, நிறைய பிரச்சினைகள் உண்டு என்றார்கள். நாட்டில் நடைபெறும் யுத்தத்தினாலும், இனவாத பிரசாரங்களினாலும் பல்வேறுபட்ட சிரமங்களை பாடசாலைகளில் அனுபவிக்கின்றோம். எமது கல்வி முயற்சிகளில் சிங்கள ஆசிரியர்கள் அக்கறை காட்டுவதில்லை. நாங்கள் பாடசாலைக்கு செல்லாவிட்டால் கூட, நீ ஏன் பாடசாலைக்கு வரவில்லை என்று கேட்கமாட்டார்கள். இத்தகைய நிலமைகளால் எம்மைப் போன்ற பல தமிழ் மாணவர்கள் பாடசாலைக்கு செல்வதையே நிறுத்திக் கொண்டார்கள்.

இப்பகுதியில் எல்லோராலும் மதிக்கப்படும் ஒரு முதியவரை சந்தித்தோம். கல்வியறிவு மிக்க அந்த முதியவர் கூறியவையும் சிந்திக்க தக்கவையே. பெரும்பான்மை இனத்தவரை பொறுத்தவரையில் பல்வேறு முயற்சிகளில் ஈடுபடுவதற்கு சகல வசதிகளும் உண்டு. அவர்கள் விரும்பிய பயிரை நடலாம், விரும்பிய வியாபாரத்தை செய்யலாம். எம்மைப் பொறுத்தவரை இந்த தோட்டலயனை விட்டு ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியாது. எமக்கு அத்தகைய கட்டபாடு உண்டு. நாட்டில் நடைபெறும் யுத்தத்தினாலும் பல்வேறு இனவாத பிரசாரத்தினாலும் இப்பகுதியில் ஒரு அச்ச நிலையே காணப்படுகிறது. எந்த நேரம் எது நடக்கும் என்ற பயத்தில் கதவை இறுக்கி மூடிக்கொண்டு கண்ணை மூடிக் கொண்டு வாழ்கின்றோம்.

இக் குடியிருப்புகளில் இரவு நேரங்களில் களவு தாராளமாக இடம் பெறுகிறது. எல்லைக் கிராமங்களைச் சேர்ந்த சமூகவிரோதிகள் துணிச்சலாக வந்து களவெடுத்துக் கொண்டு போகின்றார்கள். இம்மக்கள் தமிழர்கள் என்ற காரணத்தினால் தான், களவு என்பது தங்கு தடையின்றி நடத்தப்படுவது போல் தெரிகின்றது.

பொதுவாகவே இப்பகுதி மக்கள் அச்சம் நிறைந்த சூழ்நிலையில் வாழ்கின்றார்கள். தமிழ் பாடசாலை இல்லாதது இப்பகுதி மக்களின், பெரிய ஏக்கமாக உள்ளது. சகல அரசியல் கட்சிகளிலும் அவர்கள் வெறுப்பையே கொண்டுள்ளார்கள்.

50 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் மக்கள் இலங்கை முழுவதும் பரவி வாழ்ந்தார்கள். இக்காலத்தில் தமது மொழியை தமது கலாச்சாரத்தை ஒரு போதும் அவர்கள் கைவிட்டதில்லை. பேரினவாதிகளின் கைக்குள் ஆட்சி அதிகாரம் சென்றதும், பல இடங்களில் இருந்து தமிழ் மக்கள் விரட்டப்பட்டார்கள். வேறுபல இடங்களில் தமிழர்கள் சிங்களவர்கள் ஆக்கப்பட்டார்கள். இன்று எல்பிட்டிய கற்றந்தொல தேயிலைத் தோட்டத்திலும் அதுவே நடைபெறுகிறது. இதை இப்படியே தொடர அனுமதித்தால் இன்னும் 10 வருடத்தில் எல்பிட்டிய பிரதேசத்தில் தமிழர் வாழ்ந்த சுவடே தெரியாமல் போய்விடும்.

17 வருடங்களாக ஐக்கிய தேசியக் கட்சியோடும், கடந்த 5 ஆண்டுகளாக சந்திரிகா அரசோடும் இரண்டறக் கலந்த இலங்கை தொழிலாளர் காங்கிரசும், அமைச்சர் தொண்டமானும், கற்றந்தொல தோட்ட மக்களுக்கு என்ன கூறுவார்களோ தெரியவில்லை. இன்று தொண்டமான் செய்யும் பிரதான கடமை எதுவென்று பார்த்தால் நகைப்பே ஏற்படுகிறது. மலையக இளைஞர்களுக்கு பூசாரி பயிற்சி வழங்கி அவர்களுக்கு சான்றிதழ் வழங்கி வருகின்றார். மற்றொரு பக்கம் கொழும்பு வாழ் தமிழ் மக்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்கும் நடவடிக்கைக்கு அறிக்கை விடுகின்றார்கள். இந் நடவடிக்கைகளை பார்க்கின்ற போது ஒரு இனம் கண்முன்னே அழிகின்றபோது அதை காப்பாற்றாது அதற்கு துணைபோவதாகவே கொள்ள முடியும்.

# தேர்தல் இடாப்புகளில் பதிவு செய்து கொள்ளுங்கள் !

புதிய தேர்தல் இடாப்புகள் தயாரிக்கும் முகமாக தேர்தல் திணைகளத்தினால் குடும்பங்கள் தோறும் அதற்கான படிவங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இன்னும் ஒரு சில நாட்களில் பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் கிராம சேவகர்கள் மூலம் திரும்ப பெறப்பட உள்ளன. கடந்த காலங்களில் பதிவு செய்யப்பட வேண்டிய பலர் பதிவு செய்யப்படாமல் இருந்ததை நாம் அறிவோம். இது தொடர்பாக எமக்கு பல முறைப்பாடுகள் கிடைத்தன. நாம் இந்த விடயத்தை அண்மையில் தேர்தல் ஆணையாளரின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளோம். குறிப்பாக வாடகை வீடுகளில் வசிக்கும் தமிழ் மக்கள் பலர் வாக்காளர்களாக பதியப்படுவது பல வருடங்களாக தடுக்கப்பட்டு வந்ததை நாம் ஆணையாளரின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளோம். ஒவ்வொரு இலங்கைப் பிரஜையுமே அவர் பதிவு செய்து கொள்வதற்கு உருத்து உடையவர் என்பதை ஆணையாளர் உறுதியாக கூறினார். வாடகை வீடுகளில் வசிப்பவர்கள் மட்டுமல்லாது அரச காணிகளில் அனுமதியின்றி குடியிருப்பவர்கள் கூட வாக்காளராக பதிவு செய்து கொள்வதற்கு உருத்து உடையவர் என அவர் மேலும் கூறியுள்ளார்.

எனவே எல்லா மக்களும் தமது பெயர்களை பதிவு செய்து கொள்ளும் முகமாக அக்கரையுடன் செயற்படுவது அவசியம் ஆகும். இது வரை படிவங்களை பெற்றுக் கொள்ளாதவர்கள் கிராம சேவகரிடம் சென்று படிவங்களை அதற்குரிய எல்லைக்குள் பூர்த்திசெய்து கையளிக்குமாறு வேண்டுகிறோம். மக்கள் தமது இந்த அடிப்படை உரிமையை நிலை நாட்ட வேண்டியது மிக அவசியமாகும் என்பதை அன்பாக சுட்டி காட்ட விரும்புகிறோம். இதில் ஏதாவது பிரச்சினை இருப்பின் சம்பந்தப்பட்டவர்களை எம்மோடு தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

எமது முகவரி :- 143, கியூ வீதி, கொழும்பு- 2
வ.திருநாவுக்கரசு
அரசியல் குழு உறுப்பினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையப்பா

## ஆண் திமிர் நிலப்பிரபுத்துவம் அரசியல் வேட்கை

கே.எஸ்.ரவிக்குமாருக்கு ஒரு பார்முலா சினிமா உண்டு. அதைப்போலவே ரஜனி காந்துக்கும் ஒரு பார்முலா சினிமா இருக்கிறது. கே.எஸ்.ரவிக்குமாருக்கு கிராமங்களும் பண்ணையர்களும் சமஸ்தானங்களும் அதன் ராஜாக்களும் தாதாக்களும் ஆலமரத்தடி பஞ்சாயத்து நீதி பரிபானங்களும் ரொம்பவும் நெருக்கமான பிடித்த விஷயங்கள். அகன்ற வீடுகள், நிமிர்ந்த முன்முகப்புகளும் பிரமாண்டமான தூண்களும் அவருக்குப்பிடிக்கும். அவர் படங்களில் கைத்துண்டை கக்கத்தில் இடுக்கிக்கொண்டு கும்பிடுபோடும் கிராம ஜனங்கள் நிறைய வருவார்கள். பண்ணையார் வீட்டில் கும்பலாக பட்டுச்சேலைக்கட்டிய, சதா சிரிக்கும் பெண்திலகங்கள் நிறைய இருப்பார்கள். பண்ணையார் ஊர்உலகத்தைப் பாரிபாலிப்பார். வல்லன்கள் வருவார்கள். சொத்துச் சண்டை, பாகச்சண்டை இருக்கும். அப்புறம் சதைப்பண்டங்களாக பெண்கள் ஆண் நாயகனைத் துரத்திக் காதலிப்பார்கள். நாட்டாமை தொடங்கி முத்து ஈறாக படையப்பா வரைக்கும் இந்தப்பார்முலா இருக்கிறது.

ரஜினி, அம்மாவுக்கு மரியாதை கொடுப்பார். தங்கைக்கு உயிரும் கொடுப்பார். நிறைய நண்பர்கள் இருப்பார்கள். பெண்களைக் கண்டால் வெட்கப்படுவார். பெண்கள் ஒரு டஜன் பேராவது அவர் மீது காமம் கொள்வர். அவரை வேலைக்காரன் / வேலைக்காரிகள், பண்ணைக் கூலிகள் கையெடுத்துக் கும்பிடுவர். வில்லன்கள் வருவார்கள்: சில வேளை கடத்தல்காரர்கள், சில வேளை கடத்தல்காரர்கள், சில வேளை பாகத் தகராறு செய்யும் சொந்தங்கள்: சிலவேளை அரசியல்வாதிகள். கனவு டுயட் ஒன்றிரண்டு பாடி, மூன்று நான்கு சண்டைபோட்டு, மனிதனாக இருந்து புனிதனாவார் ரஜனி. இதுதான் ரஜினி பட பார்முலா.

முரட்டுக்காளை முதல் வேலைக்காரன் ஈறாக, பாட்ஷா முதல் படையப்பா முதல் இந்தச்சமாச்சாரங்கள் இருக்கிறது. இந்த இரண்டு பார்முலாக்களையும் சரிவிகிதத்தில் கலந்தால் என்ன கிடைக்கும்? படையப்பா மாதிரி கனகச்சிதமான கரம் மசாலாப் பொடிப்படம் கிடைக்கும் காதலிக்கும் பெண்ணுக்கு கொஞ்சம் திமிரையும் வைத்தால், ரம்யாகிருஷ்ணன் ஜெயலலிதாவாகி விடுவார். நிலப்பிரபுத்துவ சாமுத்ரிகா இலட்சம் கொண்ட பெண்கள் ரவிக்குமாரின் ரஜனியின் ஆதர்சப் பெண்கள். மீனாவுக்கு வீட்டு வேலைக்காரி வேஷம் போட்டால் சௌந்தர்யாவாகிவிடுவார். சொத்துத் தகராறுக்கு சித்தப்பா, மணிவண்ணன். (இவர் கூத்தியாவுக்குப் பிறந்தவர்) தனவந்தரின் அசல்வாரிசு சிவாஜி கணேசன். அவரது அசல் வித்து ரஜனி காந்த். கிராமத்து வில்லன், மாவட்டச் செயலாளராகி, மன்ற உறுப்பினராகி, உள்துறை அமைச்சராகிறார். அவர்தான் நாஸர். இடைவேளையில் ஒரு திருப்பம் வேண்டுமே என்ன செய்யலாம்?

எம்.ஜி.ஆர் படங்களில் ஏழை இடைவேளைக்குப்பின் பணக்காரனாகி பெரிய பெரிய படகு கார்களில் கறுப்புக் கண்ணாடி போட்டு வண்ண வண்ண உடைகளில் வருவார். நம்நாட்டு படம் தொடங்கி மாட்டுக்கார வேலன் இரட்டை வேஷம் வரை இதைப் பார்க்கலாம். ரஜினிக்கு அத்துடன் நரைமுடியின் மீதும் காதல், தாடி, சுருட்டு, சிகரெட் என இதன் மீதும் காதல். நெற்றிக் கண் பாட்சா தொடங்கி படையப்பா வரை வயதான ரஜினி வாயில் சுருட்டுடன் தாடியுடன் வருவார். சதா ரஜனி ரசிகன் எதிர்பார்த்துப்போகிற எல்லாச்சமாச்சாரங்களும் இருக்கிறது படையப்பா படத்தில். ஏ.ஆர். ரகுமானின் இசை, இருக்கிறது. சினிமாஸ் கோப்பிலிம் இருக்கிறது. திரை நிறைய பென்னாம் பெரிய நடிகர்கள் இருக்கிறார்கள். நேற்றைய சிவாஜிகணேசன் முதல் இன்றைய பிரகாஷ்ராஜ் வரை நட்சத்திர முகங்களை அள்ளிக் குவித்திருக்கிறார் ரஜினிகாந்த்.

கதைத்தான் என்ன? ஒரே ஒரு ஊரிலே ஒரே ஒரு பெரிய வீட்டு பெருந்தனக்காரர். அவர் சிவாஜி கணேசன். மனைவி லஷ்மி. மகள் சித்தாரா. லஷ்மியின் அண்ணன் ராதாரவி. மகன் நாஸார். மகள் ரம்யா கிருஷ்ணன். ராதாரவியின் வீட்டு-வேலைக்கரி வடிவுக்கரசி. வடிவுக்கரசியின் மகள் சௌந்தர்யா. சிவாஜியின் தம்பி முறை மணிவண்ணன். மணிவண்ணனுக்கு இரண்டு ஆண்பிள்ளைகள்: ரஜினிக்கு செந்திலோடு நிறைய நண்பர்கள், ரம்யா கிருஷ்ணன் ரஜினி மீது பேய்க்காதல் கொண்டு நிறைவேறாமல் வில்லியாகி கடைசியில் செத்துத் தொலைகிறார். ரஜினிக்கு இப் படத்தில் வரும் வில்லன்களுக்கெல்லாம் பின்னாலிருந்து ஆட்டுவிக்கும் மிகப்பெரிய வில்லி ரம்யா கிருஷ்ணன்தான். நிலாம்பரி என்பது பெயர். ரஜினக்கு 2 பாட்டு ரம்யா கிருஷ்ணன், சௌந்தர்யாவுக்கு தலா ஒருபாட்டு. அப்புறம் ரஜினி புகழ்பாட ஒரு பாட்டு. திரும்பத் திரும்ப யோசித்துப் பார்க்கும் போதும் கதை என்ன என்று ஞாபகம் வரவில்லை.

ரம்யா கிருஷ்ணனுக்கு புத்திமதி சொல்கிறார். ரம்யாகிருஷ்ணனை திட்டுகிறார். சாராய போத்தல்களை உடைக்கிறார். சட்டையைக் கழற்றி விட்டு எண்ணெய் தேய்த்த உடம்போடு சண்டை போடுகிறார். சுருட்டு சுத்துகிறார். ஒற்றைவிரலை உடம்பிலிருந்து தனியே விலக்கி புது ஸ்டைல் ஒன்று காட்டுகிறார். மற்றபடி பெண்களை இப் படத்திலும் மூன்று வகையாகப் பிரிக்கிறார். பார்த்தவுடன் கையெடுத்து கும்பிடத்தோன்றும் பெண் முதல் வகை: பார்த்தவுடன் பயமூட்டும் பெண் இரண்டாவது வகை: பார்த்தவுடன் பயமூட்டும் பெண் மூன்றாம் வகை. இது ஒரு சமஸ்கிருத தத்துவம் என்றும் சொல்கிறார். படம்பார்த்தவர்களுக்குத் தெரியும்: இதுதான் படத்தின் மையக்கரு அதிக ஆசை கொண்ட ஆணும், அதிகம் கோவப்படும் பெண்ணும் உருபடமாட்டார்கள் என்பது ரஜினி திரும்பத் திரும்பச் சொல்லும் இன்னொரு தத்துவமும் உண்டு.

இப்படத்தில் வித்தியாசமாகச் சொல்லுவதற்கு என்னவாவது இருக்கிறதா?

நிச்சயமாக இருக்கிறது. அது ரஜனிகாந்தின் அரசியல்வேட்கை அப்பட்டமாக இந்தப் படத்தில் வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. மூன்று காட்சிகளை மட்டும் பேசலாம் என்று நினைக்கிறேன்.

1. ரஜினியின் வீட்டுப் பார்ட்டியொன்றுக்கு அரசியல்வாதிகள் வந்து மலைபோல இருக்கிறார்கள், கறுப்புப்பூனை படையுடன் அரசு அதிகாரிகள் வருகிறார்கள்.

பார்டி தொடங்கலாமா? என ரஜினி கேட்க வேண்டாம் தலைவரே என அரசியல்வாதிகள் ரஜனி காலில் விழுகிறார்கள்.

2. [illegible] காலிக்கு [illegible] அழைத்துப்போக வருகிறார் ரஜினி. நாஸர் மறுக்கிறார். ரஜினி தன் பின்னிருக்கும் படையைக் கொஞ்சம் அண்ணாந்து பாருங்கள் என்கிறார். காமெரா மேலே போகிறது.

ஒரே ஊர்வலம். மக்கள் வெள்ளம் வந்துகொண்டிருக்கிறது. மாட்டு வண்டிகளில், டிராக்டர்களில், லாரிகளில், டெம்போக்களில் ரஜனிக்கு ஆதரவாக மக்கள் வெள்ளம் வருகிறது.


3. ரஜனியையும் அப்பாவையும் காரில் துரத்திகிறார்கள். நாஜரும் ரம்யா கிருஷ்ணனும் அவர்களது ஆட்களும் எங்கிருந்தோ அரிவாள்களுடன் ஓடிவரும் மக்கள் கூட்டம் மரங்களை வெட்டி தார்றோட்டுகளில் சரித்து, வில்லன்களின் கார்களை மறிக்கிறார்கள்.

சரியாக காட்சிகளைக் கவனியுங்கள். டிராக்டர்களில் லாரிகளில் மாட்டுவண்டிகளில் ரஜினி ஆதரவு ஊர்வலம். ரஜினிக்கு ஆதரவாக மரம்வெட்டி சாலைத் தடைபோடும் மக்கள். ரஜினி, படத்தில் அரசியல்வாதியாக வருகிறாரா என்ன? அட குறைந்தது அரசாங்கத்தில் செல்வாக்குக் கொண்ட அதிகாரியாக வருகிறாரா என்ன? அவர் ஊர்மக்களுக்கு என்னதான் செய்தார்?

அவர் ஒரு பணக்காரர். பெருந்தனக்காரர். அது படையப்பன் எனும் முருகனின் பெயர் கொண்ட மனிதன். அவ்வளவுமட்டும்தான். ரஜினியின் பின்திரளும் மக்கள் வெள்ளக்காட்சிகள் அப்பட்டமாக அவரது அரசியல்வேட்கையின் திட்டமிட்ட காட்சி வடிவங்களாகும். ரவிக்குமார் படங்களில் வழக்கமாக தண்டாயுதம், செங்கோல்என ஏதோ நிலப்பிரபுத்துவ திமிர்த்தடிதான் ஏந்திவருவார்கள். இப்படத்தில் ரஜினி வேலேந்தி வந்து நீதிபரிபாலனம் செய்கிறார். ரஜினி, மனிதன் எனும் நிலையிலிருந்து புனிதனாகி இப்போது கடவுளும் ஆக்கப்பட்டு விட்டார். அவர் பார்த்தால் மிரளும் மாடு கூட பின் வாங்கியோடுகிறது. அவர் மனைவியின் சாவை பாம்பு காப்பாற்றுகிறது. வேல் பறந்துபோய் நிலத்தில் குத்தி நிற்கிறது. முத்து படத்தில் மேல்துணி பறக்கும் ரஜினி சாமியாராகிப்போவார். இந்தப்படத்தில் முருகக் கடவுளின் அவதாரமாகவே ஆகிவிட்டார். வேல்வேல்வேல்வேலவனே வேல் என்றொரு முருக பக்திப் பாடலின் அதே இசை அடிகள் ரஜனி புகழ்பாடும் பாடலுக்கு போடப்பட்டுள்ளது. இப்படம ரஜினியின் அரசியல் பிரவேசத்துக்கான திட்டமிடப்பட்ட முன்னோட்டம் என்று கொள்ள முடியும்.

ஆண்திமிர், ஜெயலலிதாவை விமர்சிக்கிறேன் எனும் பெயரில் வரும் ஆண்திமிர், பெண்களை பத்தினியாக தப்பினால் ராட்சசியாகக் காணும் நிலப்பிரபுத்துவ கருத்தியல். கிராமத்து மக்களை கூலி அடிமைகளாகவே வைத்திருக்க நினைக்கும் செங்கோல் ராஜ்ஜியத்தின் நீட்சியாக கையேந்திய வேல்பரிபாலனம். சினிமா கதாநாயகரின் பிரம்மையை அரசியலாக்கம் வேட்கை போன்றவற்றின் மொத்த உருவால்தான், படையப்பா திரைப்படம் படையப்பா உருவாக்கும் புனிதக்கடவுள் விம்பம் தமிழ் மக்களை மூட ஜனங்களாக்கும் ஆபத்துக்கொண்டது.

ரவிக்குமாரின் படங்கள் கிராமிய மரபுக் கதைகளின் அடியொற்றியவை. கிராமிய சடங்குகள். பண்ணையார்களின் பராக்கிரமங்கள் படோடாபங்கள், பரோபகார நடவடிக்கைகள், பெண்கள் பற்றிய ஜதீகங்கள், மாயாஜாலக் கற்பனைகள் தான் அவரது படங்களின் அடிப்படை. இப்படியான இராமாயணக் கதைகளை அடியொற்றிய படங்கள் நிறைய உண்டு. அண்ணன்மார்சாமி கதையை அறிந்தவர்களுக்கு சின்னதம்பி படத்தின் வெற்றி ஆச்சரியம் தருவதல்ல. மலையூர் மம்பட்டியான் அப்படியான நிகழ்கதைத் தன்மை கொண்டதுதான் கிராமியக் கதைகளில் கூட அடித்தட்டு மக்களின் வாழ்க்கை நோக்குக்கொண்ட கதைகள் உண்டு. மலைக்கள்ளன் கதை, மம்பட்டியான் கதை, ஆங்கில மரபில் ராபின்ஹுட்டின் கதை அத்தகையதுதான். ஆனால்ரவிக்குமாரின் கதைகள் கிராமிய பண்பாட்டில் படுகேவலமான ஆதிக்க அம்சங்களை நிலைநாட்டும் படங்கள். ஜாதீக ஒடுக்குமுறையை, கூலி அடிமை ஒடுக்குமுறையை, ஒதுக்குதலை நியாயப்படுத்தும் படங்கள். தலை குனியும் ஜனங்களை, கையெடுத்துக் கும்பிடும் அடித்தட்டுமக்களை கேவலப்படுத்திய அரண்மனை வாசிகளை, பண்ணையார்களை, சமஸ்தானக்காரர்களை, சேனாதிபதிகளை, கவுண்டர்களை, பெருமைப்படுத்தும் படங்கள். பெண்ணடிமைத்தனத்தை தனது சித்தாந்தமாக வரித்துக் கொண்ட: மக்களை-ரசிகர்களை புதிய அடிமைகளாகக் கையாள நினைக்கும் ரஜினிகாந்தின் அபிலாசைகள். கே.எஸ்.ரவிக்குமாரின் கிராமியப் புனை கிராமியப் புனை கதைகளுக்குள் கச்சிதமாகப் பொருந்துகிறது.



படையப்பா: ஆண் திமிரை நியாயப்படுத்தும் படம். நிலப்பிரபுத்துவ அடிமைத்தனத்தை நவீன காலத்துக்குரியதாக ஆக்கும்படம், ரஜினிகாந்தின் அரசியல்வேட்கையை கூச்சநாச்சமின்றி முன்வைத்த படம், படையப்பா எனும் மூடப்படம் நமது விவேகத்திற்கு ஒரு சவால்மாதிரி.

**யமுனா ராஜேந்திரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புயலாக மாறியுள்ள சேரிமக்கள்!

கொழும்பு நகரம் இன்று பல்வேறு விதத்தில் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நகரமாக மாறியுள்ளது. பாதுகாப்பு காரணங்கள் என்ற போர்வையில் நகரின் பல பகுதிகள் மூடப்பட்டுள்ளன. மறுபுறத்தில் எங்கு வெற்று நிலங்கள் உள்ளனவோ அதை தேடிப்பிடித்து சர்வதேச கம்பனிகளுக்கு கூசாமல் விற்கும் நடவடிக்கையும் அரசு தொடர்ந்தும், மேற்கொண்டு வருகிறது. அதே வேளை அரச அனுமதியில்லாமல் குடியிருக்கின்றனர், என்ற காரணத்தை முன்வைத்து, பெறுமதி மிக்க நிலங்கள் என்று கருதப்படுகின்றவற்றையும், அரசு விற்று வருகிறது. இந்நிலங்களில் குடியிருப்பவர்கள் ஈவு இரக்கமற்ற முறையில் அப்புறப்படுத்தப்படுகின்றனர். இன்று கொழும்பின் பலபாகங்களிலும் சேரி குடியிருப்புக்களை காணமுடியும், பலவற்றிக்கு அரச அங்கீகாரம் உண்டு, இன்னும் பல அரச அங்கீகாரம் அற்ற குடியிப்புக்கள் உள்ளன. நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் பதவியில் இருந்த அனைத்து அரசாங்கங்களுமே, ஏழை மக்களின் வசதி, வாய்ப்புக்களை குறைப்பதில் தான் கவனம் செலுத்தி வந்துள்ளன. இதனால் சேரிகளில் வாழ்ந்து வரும் மக்கள் பல்வேறுபட்ட துயரங்களுக்கு ஆளாகி வருகின்றனர். உதாரணமாக இருநூறு குடும்பங்களை கொண்ட ஒரு குடியிருப்பில் ஒருவாறு ஆண்டும் ஏற்படும் மாற்றங்களுக்கு உரிய பரிகாரம் காணப்படாவிட்டால் அதுவே பெரும் பிரச்சினையாக மாறிவிடும். ஆனால் கொழும்பை பொறுத்தவரை சேரிகளில் நிரம்பி வழியும் மக்களுக்கு எத்தகைய குறிப்பிடத்தக்க மாற்றமும் மிக நீண்டகாலமாக ஏற்படுத்தப்படவில்லை. முக்கியமாக புதிய குடியிருப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கபடவில்லை. இதனால் பொறுமை இழந்த அம்மக்கள் இன்று பலாத்காரமான முறையில் குடியிருப்புகளை ஏற்படுத்தும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இத்தகைய குடியிருப்புக்களில் வாழ்கின்ற மக்களை மனித இனமாகவே அரசாங்கம் கருதாமல் இருக்கின்றது. இவர்கள் இன்று மனிதத் தூசுகளாக இயற்கை அனர்த்தங்களுக்கும், அரச அடாவடித்தனங்களுக்கும் ஆளாகி வருகின்றனர்.

புதிய குடியிருப்புக்களில் உள்ள மக்களை கிராமசேவையாளர் சிவில் பிரசையாக ஏற்க மறுகின்றார். பொலிசார் இம்மக்களின் முறைப்பாடுகளை ஏற்காது விடுகின்றனர். தேர்தல் திணைக்களமும், இவர்களை வாக்காளர்களாக ஏற்கவில்லை. எனவே சுருக்கமாகச் சொல்லப் போனால், இந்த நாட்டுக்கு உரிய மக்களாகவோ, அல்லது மனித இனமாகவோ, மதிக்கும் நிலையில் ஆட்சியல் உள்ளவர்களும், அரச அதிகாரிகளும் இல்லை.

அண்மையில் பெய்த கடும் மழையினால், நாடே வெள்ளக்காடாகியது. சேரிமக்களின் நிலை மிக மோசமான கட்டத்துக்கு சென்றது புதிய குடியிருப்பு மக்களின் நிலை அதள பாதாளத்துக்கே சென்றது. உதாரணமாக மாளிகாவத்தை பகுதியில் உள்ள 151ம், 59ம் தோட்டங்களுக்கு எத்தகைய உதவியையும் அரசாங்கமோ, அரசசார்பற்ற நிறுவனங்களோ செய்ய முன்வரவில்லை. புதிய இடதுசாரி முன்னணியை சேர்ந்த ஒரு சில தோழர்களின் அயராத முயற்சியால் அக்குடியிருப்பு மக்களுக்கு சிறிது உதவி கிடைத்தது. இதே போன்று மட்டக்குளி கடற்கரைப் பகுதியில் இருந்த மக்கள் பொலிசாரால் பலாத்காரமாக அப்புறப்படுத்தப்பட்டனர். இப்பகுதியில் வாழ்ந்த மக்கள் பல நாட்களாக நடுவீதியில் வாழ வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டனர். இதிலும் புதிய இடதுசாரி முன்னணியைச் சேர்ந்த ஒரு சில தோழர்களின் விடா முயற்சியால், அம்மக்கள் தாம் வாழ்ந்த குடியிருப்புகளில் மீண்டும் குடியமர்ந்தனர். ஆனால் மீண்டும் அங்கிருந்து விரப்பட்டுள்ளனர்.

அண்மையில் வெள்ள நிவாரணமாக அரிசி, பருப்பு போன்ற உலர் உணவு பொருட்கள் கொழும்பின் பல பாகங்களிலும் வழங்கப்பட்டன. இவை பெரும்பாலும் பொது ஜன முன்னணி ஆதரவாளர்கட்கே வழங்கப்பட்டது. நவகம்புர பகுதியில் 6 அடி வெள்ளம் நின்ற மக்களுக்கும், வாடகை குடியிருப்பாளர்களுக்கும் இந்நிவாரணம் வழங்கப்படவில்லை. மாளிகாவத்தை பகுதியிலும் 6 அடிக்கு மேல் வெள்ளம் நின்ற குடியிருப்பில் ஒருவருக்கு கூட இத்தகைய நிவாரணம் கொடுக்கப்படவில்லை. மாறாக வெள்ளமே நிற்காத மாடி வீட்டில் குடியிருந்தவர்களுக்கே இந்த நிவாரணம் வழங்கப்பட்டு உள்ளது. இந்த நிவாரணத்தை வழங்கியவர் சாதாரணமானவர் அல்ல, அமைச்சர் பேட்டி பிரேம்லால் தான் முன்னின்று இந்தக் காரியத்தை நிறைவேற்றினார்.

என்னென்ன வழிகளில் சேரிப்பகுதி மக்களை ஒதுக்கி தள்ளலாமோ அத்தகைய வழிகள் அனைத்தையும் அரசாங்கம் செய்து வருகின்றது. இதனால் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடும் கும்பல்களும் இம்மக்களை பதம் பார்த்து வருகின்றன. சுகாதார வசதி என்பது இம்மக்களுக்கு என்னவென்றே தெரியாத நிலையில் அவர்கள் உள்ளனர். இக் குடியிருப்புக்களில் உள்ளவர்களில் அனேகர் ஏதாவது ஒரு நோயின் தாக்கத்துக்கு உள்ளாகியே இருக்கின்றனர். கல்வி வசதி என்பது கானல் நீராகவே உள்ளது. பாடசாலை நடைபெறும் நாட்களில் இப்பகுதிக்குச் சென்றால் பாடசாலைக்கு செல்லும் வயதில் உள்ள பிள்ளைகள் அங்கே விளையாடிக் கொண்டு இருப்பதைக் காண முடியும்.

இச்சேரி மக்களின் இத்தகைய பெரும் துன்பச் சுமைகளை ஏன் ஆட்சியில் இருக்கும் அரசாங்கங்கள் பாராமுகமாக உள்ளன. என்பதற்கு பலமான ஒரு அடிப்படைக் காரணமும் உண்டு. கொழும்பு நகரத்தை ஒரு வர்த்தக நகரமாக்கும் முயற்சியில் இன்று அரசாங்கம் ஈடுபட்டு வருகின்றது. இதன் ஓர் அங்கமாக கொழும்பு நகரத்தில் உள்ள சேரிகளை அப்புறப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. சேரிகளை விட்டு வெளியேறும் மக்களுக்கு கொழும்பு மாநகரின் எல்லைக்கு அப்பால் உள்ள பிரதேசங்களில் காணி வழங்கப்படும் என்றும் அரசாங்கம் கூறுகின்றது. பல நூற்றாண்டு காலமாக பரம்பரை பரம்பரையாக நகரத்தில் வாழ்ந்த இம் மக்கள் கூட்டத்தை ஆள் ஆரவாரம் அற்ற வெட்டை வெளிகளில் குடியேற்றுவது நீதியா? சேரிகளில் குடியிருக்கும் மக்கள் நகரின் மைய நிலையங்களிலே தொழில் புரிகின்றனர். இங்கனம் இவர்கள் தொலைத் தூரத்துக்கு சென்றால் எப்படி அவர்களின் தொழில்களைச் செய்வது இக்குடியிருப்புக்களில் உள்ள ஓரளவு எண்ணிக்கையான பிள்ளைகள் நகரப் பாடசாலைகளில் கல்வி பயில்கின்றனர். இவர்களின் எதிர் காலம் தான் என்ன? ஏழைகள் இல்லாத நகரமாக கொழும்பை காட்ட முயல்கிறது. இலங்கை அரசு ஹிட்லர் யூத இனம் இல்லாத ஜேர்மனியை உருவாக்க முற்பட்ட போது மாண்ட யூதர்களின் எண்ணிக்கை கணக்கில் அடங்காது. இதே போன்றதொரு நிலையே கொழும்பிலும் ஏற்படக் போகின்றது. இன்று கொழும்பி 800க்கு மேற்பட்ட சேரிகள் உள்ளதாக அறியப்படுகின்றது. இவற்றில் லட்சக்கணக்கன மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இப்பகுதிகளில் புதிய அபிவிருத்தி திட்டங்களை செய்வதில் அரசாங்கம் பின்நிற்கிறது. மாறாக தற்போது வழங்கப்பட்டு வருகின்ற வசதிகளையும் அரசாங்கம் குறைத்துக் கொண்டே வருகின்றது. இதனால் பல்வேறுபட்ட துன்பங்களை இம்மக்கள் அனுபவித்து வருகின்றனர்.

அரச ஆதரவில் உள்ள குண்டர்கள் சேரிப்பகுதிகளில் தமது சர்வாதிகாரத்தை நிலைநிறுத்தி வருகின்றனர். இப்பகுதிகளை இவர்கள் வைத்தது தான் சட்டம் என்ற நிலையே இன்றும் உள்ளது. வாக்கு வங்கிகளை குண்டர்கள் மூலம் பெறுவதால் அரசாங்கமும் கைகட்டி மௌனமாக நடக்கிறது. இங்கனம் பல்வேறு கோணங்களில் இருந்து வந்த சோகங்களின் கூட்டாக தற்போது ஒரு கூட்டு அமைப்பு முன்னணி ஒன்று தோன்றியுள்ளது. அதன் பெயர் கொழும்பு சேரிவாழ் மக்கள் முன்னணி இதன் தலைவராக சேரிப்பகுதிகளில் அனுபவம் வாய்ந்த ஒரு இளம் தலைவர் உள்ளார்.

முன்னணியினர் கொழும்பு நகரில் வசிக்கும் சேரி மக்களை ஒரு அமைப்பின் கீழ் கொண்டு வரும் முயற்சியல் ஈடு பட்டுள்ளனர். சேரி வாழ் மக்களின் சகல பிரச்சினைகளையும் முன்வைத்து ஒரு மாநாடு ஒன்றை நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே ஆட்சியில் இருக்கும் அரசுகளால் மதிக்கப்படாத இம்மக்கள் கூட்டம் புயலாக கிளம்பத் தொடங்கியுள்ளது. இவர்களின் போராட்டத்துக்கு பேராதரவு வழங்குவது மனித சமூகத்தின் மகத்தான கடமையாகும்.

# சிங்கள வீரவிதான இயக்கத்துக்கு பொலிசார் ஆதரவா?

கடந்த 20.05.99ல் சிங்கள இனவாத இயக்கமான வீரவிதான அமைப்பு தனது இனவாத கூட்டத்தை விகாரமாதேவி பூங்காவில் நடத்தியது. இக்கூட்டம் ஆர்ப்பாட்ட ஊர்வலத்துடன் நடைபெற்றுள்ளது. கூட்டத்திற்கு பொலிசார் பூரண பாதுகாப்பும், ஆதரவும் வழங்கியுள்ளனர்.

மேற்படி கூட்டத்தை பார்க்கச் சென்ற நவசமசமாஜக் கட்சியின் மத்திய கொழும்பு கிளை அங்கத்தவரும், புதியசமதர்ம பத்திரிகையின் நிர்வாகிகளில் ஒருவராகிய பழனிமுத்து பஞ்சவர்ணம் பொலிசாரால் கைது செய்யப்பட்டு மூன்று நாட்கள் விளக்க மறியலில், வைக்கப்பட்டு பின்பு எதுவித குற்றமும் இன்றி கோட்டை நீதி மன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார்.

தோழர் பஞ்சவர்ணம் கூட்டத்தை பார்க்கச் சென்ற போது இரண்டு இனவாதிகள் அவரை பின் தொடர்ந்து வந்து, பொலிசாரிடம், அவர் ஒரு விடுதலைப்புலி என கூறியுள்ளனர். பொலிசார் உடனடியாக பஞ்சவர்ணத்தை கைது செய்துள்ளனர். பொலிசாரால் கைது செய்யப்பட்ட அவர், நவசமசமாஜ கட்சி காரியாலயத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு அவர் கட்சி அங்கத்தவரா என விசாரித்து உள்ளனர். நவசமசமாஜக் கட்சியின் காரியாலயத்தில் கடமையில் இருந்த அரசியல் குழு உறுப்பிள்ர்களான நடராசா, ஜனகன், அனோமா தில்றுக்சி ஆகியோரும், நிர்வாக செயலாளரான சுஜீவா ஆகியோர் பஞ்சவர்ணம், கட்சியின் அங்கத்தவர் என கூறியுள்ளனர். இதன் பின்பு கட்சியில் இருந்து ஒருவர் பொலிஸ் நிலையம் வந்து பஞ்சவர்ணத்தை கூட்டிச் செல்லுமாறு பொலிசார் தெரிவித்திருந்தனர். இதன் அடிப்படையில் கட்சியின் நிர்வாக செயலாளர் சுஜீவா கொம்பனி வீதி பொலிஸ் நிலையம் சென்ற போது, பொலிசார் பஞ்சவர்ணத்தை விடுதலை செய்ய முன்வரவில்லை. இதன் பின்பு 21.05.99ல் கட்சியில் இருந்து பொறுப்பான ஒருவர் பொலிஸ் நிலையம் வருகை தருமாறு பொலிசார் தொலைபேசி மூலம் அழைப்பு விடுத்தனர்.

கட்சியில் இருந்து அரசியல் குழு உறுப்பினரான வ.திருநாவுக்கரசு, வி.எஸ் மணியம், ஆகியோர், பொலிஸ் நிலையம், சென்று வாக்கு மூலம் கொடுக்கப்பட்டது. இதன் பின்பு பொலிஸ் நிலைய பொறுப்பு அதிகாரி மாலை வந்தவுடன் பஞ்சவர்ணத்தை விடுதலை செய்வதாக பொலிசார் உறுதி அளித்திருந்தனர். ஆனால் 12 மணியளவில் பஞ்சவர்ணம் கோட்டை நீதி மன்றத்துக்கு கொண்டுவரப்பட்டு மகசீன் சிறையில், தடுப்புக் காவலில் இருக்குமாறு உத்தரவு இடப்பட்டது.

மீண்டும் 24.05.99ல் எதுவித குற்றமும் இல்லாத நிலையில் கோட்டை நீதி மன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார்.

மேற்படி சம்பவங்களை பார்க்கின்ற போது தோழர் பஞ்சவர்ணத்தின் விடயத்தில் பொலிசார் நடந்து கொண்ட விதம் பெரும் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

வீரவிதான இயக்கம் 20.05.99ல் நடத்திய கூட்டத்தில் எடுத்த முக்கிய தீர்மானங்களில் ஒன்று. கொழும்பில் உள்ள தமிழர்கள் எல்லோரும் வெளியேற வேண்டும் என்பதே இலங்கை, ஒரு பல்லின மக்கள் வாழுகின்ற நாடு, இங்கு ஜனநாயகம் உண்டு, என அரசாங்கம் தினம் கூறுகின்றது. இந்நிலையில் கொழும்பில் இருந்து தமிழரை வெளியேறு என்று கூறுகின்ற அமைப்புக்கு அரசாங்கம் ஆதரவு கொடுத்துள்ளது.

இனவாதத்திற்கு எதிராக கடந்த 20 வருடகாலமாக நவசமசமாஜ கட்சி இயங்கி வருகின்றது. இனவாதத்திற்கு எதிராக போராடி 20 மேற்பட்ட பேராழிகளை இக்கட்சி இழந்திருக்கிறது. தற்போதைய ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரின், கணவர் விஜயகுமாரணதுங்கா உருவாக்கிய ஐக்கிய சோசலிச முன்னணியில் நவசமசமாஜ கட்சியும் ஒன்று விஜகுமாரதுங்கா மரணமடைந்த போது, அவரது இறுதி அஞ்சலிக் கூட்டத்தில் சந்திரிகாவோடு, நவசமசமாஜ கட்சி பொதுச்செயலாளர் விக்கிரமபாகு கருணாரத்தினா கலந்திருந்தார். இத்தகைய போராட்ட பாரம்பரியங்களை கொண்ட கட்சியின் அங்கத்தவர் ஒருவரை இன்று எது வித காரணமும் இன்றி சந்திரிகா அரசு மூன்று நாட்கள் சிறை வைத்துள்ளது.

எந்த இனவாதத்திற்கு எதிராக போராடி தோழர் விஜய குமாரணதுங்கா மரணத்தை தழுவினாரோ அதே இனவாத கும்பலுக்கு இன்று விஜே மனைவி துணை போவது வருந்தத்தக்கது.

இனவாதமானது ஆட்டைக் கடித்து மாட்டைக்கடித்து பின்பு ஆளைக்கடிக்கும் நிலை வந்து சேராது என்பதற்கில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய சமதர்மம்

Registered as a news paper in Sri Lanka.



வாசகர்களே!

உங்களிடமிருந்து கருத்துக்கள், விமர்சனங்கள், ஆலோசனைகள், ஆக்கங்கள் என்வற்றை வரவேற்கிறோம்.

தொடர்புகட்கு

ஆசிரியர்

புதிய சமதர்மம்

142/3, கியு வீதி, கொழும்பு-02

தொலைபேசி: 430621, 075-344008 தொலைமடல் : 334822



## இ.தொ.கா எங்கே?

மலையகத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் யாராலும் அசைக்க முடியாத சக்தியென அவ்வமைப்புத் தலைவர்கள் எண்ணினர். அதன் ஒற்றுமையினாலும் பலத்தினாலும் தான் பறித்தெடுக்கப்பட்ட பிரசாஉரிமையினை மீண்டும் வென்றெடுக்கக் கூடியதாயிருந்தது என்று இ.தொ.கா தலைவர் தொண்டமான் அடிக்கடி கூறுவதுண்டு. முன்னைய காலத்தில் இன்றைய இலங்கை தேசிய தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் செல்லசாமி இ.தொ.கா பொதுச் செயலாளராகச் செயலாற்றிய போது கொழும்பிலிருந்து ஒரு தொலைபேசி மூலம் மலையகத்தை ஸ்தம்பிக்கச் செய்வோம் என முழங்கியிருந்ததை நாம் அறிவோம். அது அரசாங்கத்தில் இ.தொ.கா. அங்கம் வகிக்காத ஒப்பீட்டளவில் செல்வாக்காயிருந்த காலகட்டம் பின்பு கடந்த 22 வருடங்களாக இ.தொ.கா. மாறி மாறி பதவியேற்ற எல்லா அரசாங்கங்களிலும் அங்கம் வகித்து வந்துள்ளது தெரிந்ததே. அமைச்சர் பதவி வகித்தாலும் மலையகத் தொழிலாளர்களை வேண்டிய வேளையில் போராட்டத்தில் இறக்கத் தயங்கமாட்டேன் என்று அடிக்கடி தலைவர் தொண்டமான் கூறுவதுண்டு. அதே நேரத்தில், நாம் அரசாங்கத்திற்கு எவ்வளவு தான் ஆதரவளித்தாலும் எம்மை ஆட்சியாளர் மாற்றந்தாய் மனப்பான்மையில் நடத்துகின்றனரே என அவர் மனம் நொந்து கொண்டது நாடறிந்த விடயம். இ.தொ.கா. அரசாங்கங்களில் அங்கம் வகித்து, தொழிலாளர் நலன்களைக் காற்றில் பறக்க விட்டு இறுதியில் வரலாற்றின் குப்பைத் தொட்டியில் வீழ்வதை தவிர்க்க வேண்டுமானால் அது எதிரணியில் நின்று செயற்பட வேண்டும் பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன் என்ற நிலை இருக்கக் கூடாது என்று நாம் நீண்ட காலமாக பல தடவைகள் வற்புறுத்தியிருந்தோம்.

இன்று இ.தொ.கா. தனது நம்பகத்தன்மையை முற்றாக இழந்து விட்டது. இதனை ஈடுசெய்வதற்காகவோ என்னவோ தொண்டமான் தலைமையில் முன்னர் இலங்கை இந்திய கலாசாரப் பேரவை நிறுவப்பட்டது, சிறிது காலத்தின் பின் அதுவும் மறைந்து விட்டது. பின்பு மீண்டும் தொண்டமான் தலைமையில் அமைக்கப்பட்டது தான் இந்திய வம்சாவழி மக்கள் பேரணி மலையகத் தொழிற் சங்கங்களின் கூட்டமைப்பாக இது சித்திகரிக்கப்பட்டுள்ளது. இ.தொ.கா. வின் சேவல் சின்னம் ஒதுக்கப்பட்டு தேசிய தொழிலாளர் சங்கத்தின் மயில் சின்னம் பாவனைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

வரலாற்றைப் பின்னோக்கிப் பார்த்தால் ஆரம்பத்தில் மலையக மக்கள் சார்பில் இலங்கை இந்திய காங்கிரஸ் என்ற பெயரிலான அமைப்பே உருவாக்கப்பட்டது. அது காலப்போக்கில் இ.தெ.கா. வாக பரிணமித்தது. இன்று மீண்டும் ஆரம்பகாலத்தில் கொண்டிருந்த நாமத்தைச் சூடும் நிலை ஏற்பட்டுள்ளது. இ.தொ.கா. ஒரு காலத்தில் தனக்கென வரித்துக் கொண்ட ஏகபோகம், தனிப்பெரும் தலைவர் தொண்டமான் என்ற மிடுக்கு யாவும் தவிடுபொடியாகி விட்டது. மந்திரிப்பதவியிருந்தென்ன, மாடமாளிகை இருந்தென்ன, தொழிலாளர் பலமின்றி தலைமையத்தையே பாதுகாக்க முடியவில்லையே. அந்தோ பரிதாபம்.

## வடக்கில் அதிகரிக்கிறது மனிதப் புதைக்குழிகள் மௌனமாகியுள்ளது தமிழ் தலைமைகள் !



இன்று உலகிலே பல்வேறு பகுதிகளில் தேசிய இனப் பிரச்சினை கொழுந்து விட்டு எரிகிறது. பலஸ்தீனம் அயர்லாந்து குருதிஸ்தான், கொசோவோ, காஷ்மீர், கிழக்கு திமோர், என அடுக்கிக் கொண்டே போகலாம். இந் நாடுகளில் நிலமை கட்டுக் கடங்காமல், போய்க் கொண்டு இருக்கிறது. அமெரிக்காவுக்கும், ரூசியாவுக்கும், பனிப்போர் முடிவடைந்த நிலையில், இன்று அமெரிக்காவே உலகப் பொலிஸ்காரனாக மாறியுள்ளது. இத்தகைய சூழ்நிலையில், இப்போராட்டங்கள் மீது நிகழ்த்தப்படும் கொடுரங்களும், மனித உரிமை மீறல்களும், கட்டுக்கடங்காமல் செல்கின்றன. அவற்றுடன் மனிதப் புதைக்குழிகளும், இப்பகுதிகளில் மலிந்து காணப்படுகின்றன.

இதே நிலை தான் இன்று வட இலங்கையிலும் நடைபெறுகிறது. ஏற்கனவே செம்மணிப் புதைகுழிகளால் கலங்கி போய் இருக்கும், தமிழ் மக்கள், தற்போது துரையப்பா விளையாட்டரங்கு புதைகுழி பற்றிய செய்தியால் இரத்தம் உறைந்த நிலையில் காணப்படுகின்றனர். முற்று முழுதான இராணுவ ஆக்கிரமிப்புக்குள் வாழும் மக்கள் வடபகுதி மக்களாவர். இவர்களில் ஆயிரத்துக்கு மேலானோர் காணாமல் போய் உள்ளனர். தடுப்புக்காவலில் உள்ளோர் விபரமும் தெளிவில்லாத நிலையிலே உள்ளது. மலசலகூட குழிகள், பொது இடங்கள் போன்றவற்றிலும், மனித எலும்புக் கூடுகள் ஏற்கனவே கண்டறியப்பட்டுள்ளன.

இச் சம்பவங்களால், சர்வதேச ரீதியான கண்டனங்களுக்கு இலங்கை அரசு ஆளாகி வருகிறது. ஆனாலும் யுத்தத்தின் மூலம் சமாதானம் என்கின்ற பழைய பல்லவியையே மீண்டும், மீண்டும் பாடுகிறது, இலங்கை அரசு. தீர்வு விடயத்தில் மௌனமாகவே உள்ளது. இந்த மௌனத்தை கலைக்கக் கூடிய வலுவான காரணிகள் இன்று இருக்கின்றன. தமிழ் தலைமைகள் கை கட்டி மௌனமாக இருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

வெறுமனே பாராளுமன்றத்தில், குரல் கொடுத்தலும், பத்திரிகைகளில் அறிக்கை விடுதலும், வெளிநாட்டு ராஜாதந்திரிகளின் விருந்துகளில், கலந்து கொள்வதிலுமே தமிழ் தலைமைகள் கவனமாக இருக்கின்றன. இவற்றை விட சில பிரிவுகள் அவசர காலச் சட்டத்துக்கும் ஆதரவாக மாதா மாதம் வாக்களிக்கின்றன. இன்று சிலர் தமக்குள் மோதுகின்ற நிலையிலும் உள்ளனர். இவர்களை துரும்பாக பாவித்தே சந்திரிகா அரசு சர்வதேச கண்டனங்களில் இருந்து தப்ப முயற்சிக்கிறது.

ஆட்சியாளர்களுக்கு ஆதரவு வழங்குவதன் மூலம் தமது மக்களுக்கான உரிமைகளை பெற்றுக் கொள்ள முடியும் என்று நினைத்தால் அத்தகையோரை அரசியல் கோமாளிகள் என்றே கூற வேண்டும். தலைவர் தொண்டமான் அத்தகையவராகவே காணப்படுகின்றார். இவரின் அடிச்சுவட்டை பின்பற்றி இன்று ஏனைய தமிழ் கட்சிகளும். செயற்படுகின்றன. அரச ஆதரவு போக்கு 1948ம் ஆண்டு காலப்பகுதியில் இருந்தே தமிழ் அரசியல் தலைமைகள் பின்பற்றி வந்த போக்காகும். அடங்காத் தமிழன் சி.சுந்தரலிங்கம் முதல், ஜி.ஜி. பொன்னம்பலம் திருச்செல்வம், குமாரசூரியா போன்றோர் வரை இதில் சறுக்கி விழுந்தனர். அத்துடன் இவர்களின் போக்கிற்கு மக்களும் அக்காலத்தில் இழுக்கப்பட்டனர்.

ஆனால் இன்று நிலை அப்படி அல்ல. ஐம்பதுக்கு ஐம்பது என்றாலும் தமிழ் மக்கள் ஏற்கத்தயாரில்லை. சமஷ்டியையும் ஏற்கதயாரில்லை. இன்று தமிழ் மக்கள் வேண்டுவது தமது தாயகத்தை அங்கீகரித்தல் என்ற கோரிக்கையாகும். இதில் அவர்கள் தெளிவாகவும் உள்ளனர். இதற்காக தமிழ் மக்கள் சந்தித்துள்ள இழப்புக்கள், செய்துள்ள தியாகங்கள் கணக்கில் அடங்காதவை. இன்று தமிழ் தாயின் கருப்பையில் இருந்து வெளிவரும் ஒவ்வொரு தமிழ் குழந்தையும், தாயகத்தை அங்கீகரி என்ற கோசத்துடனேயே வெளிவருகிறது. இத்தகைய சூழ்நிலையில் பல்லாயிரக் கணக்கான, இராணுவத்தை குவித்து வைத்து, தமிழ்மக்களை கொலை செய்து, கொள்ளையடித்து, துன்புறுத்தி, அடிபணியச் செய்ய அரசு முயல்கிறது. இத்தகைய சூழ்நிலையிலும் சக மாணவன் ஒருவனை கைது செய்ததற்காக திரண்டெழுந்த வடபகுதி மாணவ சமூகத்தின் கொதிப்பைக் கண்டு இலங்கை இராணுவம் கலங்கிப் போய் உள்ளது.

எனவே தமிழ் மக்கள் அற்ப, சொற்ப சலுகைகளை விரும்புவார்கள் என்றோ, தமிழ் பிரதிநிதிகளின் போக்கை ஆதரிக்கின்றார்கள் என்றோ யாரும் தப்புக் கணக்கு போட வேண்டாம். வடக்கு கிழக்கு மக்கள், தமது மண் மீதும், தமது உரிமை மீதும், அதற்காக போராடுகின்றவர்கள் மீதும், பிரிக்க முடியாத அளவு அவாவை கொண்டுள்ளனர். இதை உணராமல் தமிழ் தலைமைகள் தமது பயணத்தை தொடர்ந்தால், அவர்கள் எள்ளி நகையாடப்பட வேண்டியவர்கள் தானே!

## இலங்கை இராணுவ அதிகாரி சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கின்றார் !

தென் மாகாணசபைத் தேர்தலில் புதிய இடதுசாரி முன்னணி சார்பில் போட்டியிடுகின்ற ஜெகத்லால் கெடமுனே 18.05.99ல் புதிய இடதுசாரி முன்னணியினர் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து கொண்டு தனது கருத்தை ஒளிவுமறைவின்றி தெளிவுபடுத்தினார். நவசமசமாஜக் கட்சி உள்ளிட்ட புதிய இடதுசாரி முன்னணியின் பிரதான கொள்கைகள் யாவருக்கும் தெரியும்.

1. யுத்தம் நிறுத்தப்பட வேண்டும்.
2. தமிழ் மக்களின் தாயகம் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.
3. தனியார் மயமாக்கல் நிறுத்தப்பட வேண்டும்.

மேற்படி கொள்கைகள் இந்த நாட்டின் இனவாதிகளுக்கு பெரும் ஆத்திரத்தையும் எதிர்ப்பினையும் உண்டு பண்ணியுள்ளது. எனவே இத்தகைய சூழ் நிலையில், கொடுமையான யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கம் இவ்வேளையில், ஒரு இராணுவ அதிகாரி இத்தகைய கொள்கைகளை உடைய ஒரு கட்சியின் சார்பாக போட்டியிட முன் வந்திருப்பது, சிங்கள மக்கள் மத்தியில் யுத்தம் சம்பந்தமாக ஏற்பட்டு வரும் மனமாற்றத்தையே எடுத்துக் காட்டுகிறது.

ஜெகத்தால் கொடமுனே தனது கருத்தாக கூறியதாவது, இந்த யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இராணுவ [illegible] செய்கிறார்கள். இப்படியே இந்த யுத்தம் தொடாந்தால் நாட்டுக்கு பேரழிவே ஏற்படும். அதற்காகவே, தென் மாகாணத்தில் இருந்து இராணுவத்துக்கு சென்று அநியாயமாக உயிரை பறிகொடுக்கும், இளைஞர்களின் உயிரை காப்பாற்றவே தான் தேர்தலில் போட்டியிடுகின்றார்.

கடந்த 17 வருட யூ.என்பி. ஆட்சியாக இருந்தாலும் சரி பொது ஜன முன்னணியின் 41/2 வருட ஆட்சிக் காலமாக இருந்தாலும் சரி இந்த யுத்தம் சம்பந்தமான போக்கில் எதுவித வித்தியாசத்தை அவதானிக்க முடியவில்லை. யுத்தத்தை பயன்படுத்தி ஆட்சியை விஸ்தரிக்கவே ஆட்சியாளர்கள் விரும்புகின்றார்கள்.

நான் கடமை புரிந்த தமிழ் பகுதிகளில் உள்ள சாதாரண மக்களுடன் பழகியுள்ளேன், அவர்கள் சமாதானத்தை பெரிதும் விரும்புகிறார்கள். யுத்தத்தின் மூலம் சமாதானம் என்கின்ற அரசின் கோசம் மக்களை ஏமாற்றும் வெறும் வார்த்தைகளே. 15 ஆண்டுகளுக்கு முன்பு இந்த நாட்டில் இனப்பிரச்சினை சாதாரண சிறிய பிரச்சினையாக இருந்தது. ஆனால் தீர்க்கப்போகிறோம் என்று யுத்தத்தை நடத்திய அண்மைக்கால ஆட்சியாளர்களே பிரச்சினையை மோசமாக்கியுள்ளனர். யுத்தத்தில் ஈடுபடும் இருபிரிவினரும் யுத்த வெற்றி தோல்விகளை தமக்கு சாதகமாக பாவிக்கவே விரும்புகின்றார்கள். இதனால் மக்களே பாதிப்படைகின்றார்கள்.

இன்று எமது நாட்டில் யுத்தத்தின் மூலம் நன்மையடையும் ஒரு பிரிவினரே தோன்றியுள்ளனர். இதில் அரச உயர் அதிகாரிகள் இராணுவ உயர் வகுப்பினர், ஆட்சியாளர்கள் உள்ளடங்கியுள்ளனர். ஆனால் மக்கள் அதே நிலையில் இல்லை. மக்கள் சமாதானத்தையே விரும்புகின்றார்கள்.

மூன்றாவது மத்தியஸ்தம், அந்நிய நாட்டு உதவி என்பன தொடர்பாக மேற்படி இராணுவ அதிகாரி கருத்து தெரிவிக்கையில் புதுப் புது சொற்றொடர்களை அரசாங்கமும், கற்பனைவாதிகளும். காலத்துக்கு காலம் கண்டு பிடிக்கின்றார்கள். இதுவே இன்றுள்ள துர்பாக்கிய நிலையாகும். முன்னை நாள் போராளிக் குழுக்கள் அரச படையினருடன் இணைந்து செயற்படுவது பற்றி உங்கள் கருத்தென்ன என்ற கேள்விக்கு. அக்குழுக்கள் தமது நன்மைக்கு இணைந்துள்ளனர். ஆனால் நாட்டுக்கோ, மக்களுக்கோ, எந்த நன்மையும் இல்லை என்றார்.

மிகவும் இளம் வயதான அந்த அதிகாரியின் பேச்சும் உற்சாகமும், மகிழ்ச்சியான தோற்றமும், அவருக்கு இலங்கை அரசியலில் ஓர் இடம் உண்டு என்பதை உறுதிபடுத்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு 02, கியூ ரோட் 143/3ம் இலக்கத்தில் வதியும் லீனஸ் ஜயதிலக்க என்பவரால் வெலோன் பெசேஸ் ஒஸ்வின் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.